போன் நெ. 15. விலை 2 அணா REGD NO. 4642

திராவிடநாடு

மலர் 13 | 17—10—54 | இதழ் 16

மக்கள் தீர்ப்பு— மகத்தான பாடம்

மகிழ்ச்சி! நன்றி! மக்களாட்சியின் மாண்பு காத்திட்ட மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்துகிறேன். கொள்கையாளர்களை மதித்த குணவான்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தலில் குறிப்பிட்ட சில தொகுதிகளில் அரசியல் ஒழுக்கம் காக்கவும், இலட்சியப் பாதுகாப்புக்காகவும் நடைபெற்ற அறப்போரில், நமது தோழர்கள், அறிவாற்றலுடன் ஈடுபட்டு, வாகை சூடினர். அவர்தம் வெற்றி, என் உள்ளத்தைப் பூரிக்கச் செய்கிறது—நீதிக்கும் நேர்மைக்கும், அரசியல் நாணயத்துக்கும் மக்கள் தொண்டுக்கும் நாடு மதிப்பளிக்கும் நிலைமை பட்டுப் போகவில்லை என்பது இந்த வெற்றிகள் மூலம் விளக்கமாகி இருக்கிறது—எனவே, புதியதோர் எழுச்சியும் நல்லதோர் நம்பிக்கையும் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் பெரும்பாலும் வெளிவந்துவிட்டன.

பெருவாரியான இடங்களைக் காங்கிரஸ் கட்சி கைப்பற்றிவிட்டது.

காங்கிரஸ் கட்சி வெற்றிபெறும் என்பதும், அதற்கான வலிவும் துணிவும், வாய்ப்பும் வழி காணும் திறனும், அக்கட்சிக்கு உண்டு என்பதும் அனைவருக்கும் தெரியும், குடியாத்தம் தேர்தல்மூலம் படர்ந்த ஒரு சூழ்நிலை, இந்த வெற்றிக்கு மேலும் உதவிற்று.

திராவிட முன்னேற்றக் கழகம் (பெரியாரிடம் பெற்ற பாடத்தின்படி) ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், மாவட்ட ஆட்சி மன்றங்கள் எனும் அமைப்புகளுக்கான தேர்தலில், அரசியல் கட்சிகள், கட்சி முறையில் ஈடுபடுவது பொருளற்றது, தேவையற்றது, தீது தருவது, என்ற கருத்துக்கொண்டிருக்கிறது.

எனவே, மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தலில், தி. மு. க. ஈடுபடவில்லை.

தேர்தலில் ஈடுபடாததற்கு சமாதானம் தேடி, மனதைச் சாந்தி செய்து கொள்வதற்கோ, பிற கட்சிகளின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஏதேனும் சாகசம் கூறலாம் என்பதற்காகவோ கூறப்படும் வாதமல்ல இது—உண்மையான நிலைமை.

அரசியல் கட்சிகள் ஈடுபடவேண்டிய பொதுத் தேர்தலில்மட்டும், தி. மு. க. என்ன தாவிக் குதிக்கிறதோ! என்று நையாண்டி செய்வோர் உளர். அவர்களின் கேலிப்பேச்சு தாக்குமே என்று நாம் உண்மையைக் கூறாமலிருக்கத் தேவையில்லை. தன் வலியும் மாற்றான் வலியும் அறிந்திருப்பது மிக மிகத் தேவை என்பதை வள்ளுவப் பெருந்தகை வலியுறுத்திக் கூறியிருக்கிறார். எனவே, நமது நிலைமை நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். பொதுத் தேர்தலில் ஈடுபடுவதற்கான தண்டு தளவாடம், இன்று நம்மிடம் இல்லை—போதுமான அளவு. அதைப் பெறுவதற்கான முயற்சியில் நாம் ஈடுபடவில்லை—இன்னமும். ஈடுபடும்போது புத்தம் புது பகைகளும் பூசல்களும் அதிகரிக்கும்—எப்போதும் உள்ள ஏசல், வேகமும் விறுவிறுப்பும் அடையும், குத்திக் குடலெடுக்கும் குணவான்கள் கூவுவர், தாவுவர், ஏவுவர்!

இந்நிலையில், தி. மு. க. மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தலில் ஈடுபடவில்லை.

திராவிடர் கழகமும் தேர்தலில் ஈடுபடவில்லை.

கழகத் தோழர்கள் தனிப்பட்ட முறையில் ஈடுபடுவதை இரு கழகங்களும் அனுமதித்தன. பலர் தேர்தலில் ஈடுபட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் சிலர் வெற்றிபெற்றுள்ளனர்—அவர்களை வாழ்த்துகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளர்கள் சிலபலர் வெற்றிபெற்றுள்ளனர்—மகிழ்கிறேன்.

பெற்ற வெற்றிகள், பெருமைக்குரியன, அரிய 'பாடம்' தருவன! வடார்க்காடு மாவட்ட தி. மு. க. செயலாளர்

★ அண்ணாதுரை ★

"தேவாலயம்" தேடியலைந்தது பக்தர்களை!

தோழர் எ. எல். சி. கிருஷ்ணசாமியும், பொதுக்குழு உறுப்பினர் எடப்பாடி தோழர் தாண்டவனும், திருஒற்றியூர் தோழர் கணபதியும் வெற்றிபெற்று, நமக்கெல்லாம் பெருமை தந்துள்ளனர், மற்றும் சிலரும் மகிழத்தக்க வகையில் வெற்றிபெற்றுள்ளனர்.

நமது கழகத் தோழர்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர்மட்டுமே இந்தத் தேர்தலில் ஈடுபட்டார்கள் என்றபோதிலும், தி. மு. கழகத்துக்கு இத்தகைய அமைப்புகளிலும் இடமளிப்பது, சிறு பொறி பெரு நெருப்பு எனத்தக்கதாகிவிடும் என்று அஞ்சிய கட்சிகள், முளையிலேயே கிள்ளிவிடவேண்டும், மூக்கறுத்து முக்காடிடச் செய்து மூலையில் உட்காரச் செய்ய வேண்டும் என்று முனைந்து நின்று எல்லாவகையான எதிர்ப்பையும் உருட்டித் திரட்டித் தாக்கின. எனினும், சில குறிப்பிடத்தக்க வெற்றிகள் நமக்குக் கிடைத்துள்ளன.

எதிர் நீச்சலிடுவதுபோன்ற செயலில் இறங்கி, வெற்றிபெற்றனர் என்ற முறையில் நமது தோழர்கள் பாராட்டுதலுக்குரியவராகின்றனர்.

காங்கிரஸ் கட்சி, இந்தத் தேர்தலின்போது கையாண்ட முறைகளும் கண்டறிந்த வழிகளும் அந்தக் கட்சிக்கோ, பொதுத்தொண்டுத் துறைக்கோ பெருமை தருவதாக இல்லை.

கள்ளமார்க்கட்காரர்களுக்குக் கைலாகு கொடுத்து' கதராடை கட்டிக் கொண்டு வருகிறேன் என்று அவர்கள் கூச்சத்துடன் கூறிட, அதற்கென்ன இப்போது அவசரம், முதலில் ஒரு கையொப்பம் போடுங்கள் என்று கெஞ்சி, ஆள் சேர்த்தது காங்கிரஸ் கட்சி.

எந்தக் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் காரியாலயத்துக்கு, தேவாலயம் செல்லும் பக்தர்கள்போல தேர்தல் விரும்பிகள் சென்று காத்துக் கிடந்தனரோ, அந்தக் காங்கிரஸ் கட்சி, யாரார் பசை உள்ளவர்கள், எவரெவர் ருசி அறிந்தவர்கள் என்று மோப்பம் பிடித்தறிந்து, அவர்களிடம் சென்று முறுவல் காட்டி, முகமன் கூறி, முன்னுள் நிலைமைகள் நடவடிக்கைகள் ஆகியவற்றை மறந்து, காங்கிரஸ் அபேட்சகராக 'தத்து' எடுத்துக் கொண்டது.

கள்ளுக்கடை வியாபாரம் கூடத்தான் இப்போது இல்லையே, கொஞ்ச காலம் காங்கிரஸ் வியாபாரம் செய்து பார்க்கலாம் என்று கணக்குப்போட்டுக் களம் சென்றவர்களுக்கும், காங்கிரஸ் கட்சி, கண்காட்டிக் காதல் ஊட்டிற்று.

பணம் முன்னணியில் குணம் மூலையில் என்றாயிற்று.

குடியாத்தத்தைக் காட்டிக் குடிலர்கள், எல்லாக் கட்சிகளுக்கும் குழி பறிக்க முனைந்தனர்.

கொள்கை மறந்தவர்கள், திறந்த வீட்டில் நுழைபவர்கள், விளைந்த காட்டுக் குருவிகள், விலைபேசிக் கொண்டு காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தனர்.

பெரியாரைப்பார்! குடியாத்தம் தேர்தலில் காமராஜருக்காக அவர் கச்சையை வரிந்துகட்டிக்கொண்டு, வேலைசெய்து வெற்றி தேடித்தந்தார் —பொருள் என்ன இதற்கு? புரியவில்லையா இந்தப் போக்கு? இனி எல்லோரும் காங்கிரசில் சேரத்தான் வேண்டும், என்று வாதாடினர், ஆதாயம் தேடிடும் அரசியல் சூதாடிகள்.

இந்த வட்டாரத்துக்கு நான்தான் காமராஜ்—ஏன் என்னை ஆதரிக்கக் கூடாது என்றே கேட்டாராம், பெருநிதியும் சுருள் மதியும் படைத்த ஓர் கோவைப் பிரமுகர்!

அரசியல் ஒழுக்கம் அவசியமற்றது என்று எண்ணப்படும் அளவுக்கு, கட்சியில் தடுமாற்றங்கள் தலைவிரித்தாடின.

எந்தச் சமயத்தில் யார் கட்சி மாறுவாரோ, என்ற அச்சத்துடனேயே, எவரையும் கவனிக்கவேண்டி இருந்தது.

பெரு வெற்றிபெற்ற படைத் தலைவன், எந்த நேரத்தில் எந்த இல்லம் நுழைந்து, எந்தக் குமாரியைச் சிறை எடுத்துச்சென்று, சிற்றின்பக் கூடத்துச் சிங்காரியாக்கிவிடுவானோ என்ற அச்சம் பிடித்துக்கொண்ட நிலையில், ஒவ்வொரு கட்சியும், எந்தச் சமயத்தில், யாரைக் காங்கிரஸ் கட்சி சிறைப் பிடித்துச் செல்லுமோ என்று அஞ்சிடும் நிலைமை இருந்து வந்தது.

குடியாத்தம் முடிந்தது, கொள்கைகள் மடிந்தன என்ற நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தைச் சாகடிக்கும் வகையில், நமது தோழர்கள், கொள்கையை மறவாமல், கோணல் பாதை புகாமல், நாணயத்துக்கு என்றென்றும் மதிப்பு உண்டு என்ற நம்பிக்கையுடன், நாடெல்லாம் காங்கிரசுக்குப் பராக்குக் கூறுகிறது என்று விளம்பரப்படுத்தப்பட்டாலும், காலமெல்லாம் காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தைக் கண்டித்து வந்த பெரியாரே, கதர் கட்டவேண்டியது மட்டும் தான் பாக்கி என்று கேலிபேசப்பட்டாலும் கடமையைக் கலங்காது செய்தல் வேண்டும் என்ற கண்ணியத்துடன், இந்தத் தேர்தலில் நமது தோழர்கள் சிலர் ஈடுபட்டனர்—வெற்றியும் கண்டனர். எனவேதான் நூற்றுக் கணக்கான காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற்றதிலே, காங்கிரசுக்கு ஏற்படாத பெருமை, விரல்விட்டு எண்ணக் கூடிய அளவில் நமது தோழர்கள் வெற்றி பெற்றதால், நமது கழகத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

இரண்டு தொகுதிகள், எல்லாவகையிலும், "கோட்டைப் போர்" போன்று இருந்தன—எல்லாக் கட்சிகளின் கவனத்தையும் ஈர்த்தன.

ஒன்று, லால்குடி வட்டம் மற்றொன்று காணை-கஞ்சனூர் வட்டம்.

இந்த இருதொகுதிகளிலும் நமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

காணை-கஞ்சனூர் தொகுதியில், உழைப்பாளர் கட்சிமூலம் அரசியல் உலகில் உயர் இடம் பெற்று, நமது உள்ளத்தில் மதிப்பான இடம்பெற்று, பிறகு அரசியல் சபலத்துக்கு ஆட்பட்டு, ஆதரித்தவர்களை அம்பலத்தில் விட்டுவிட்டு, நம்பிக் கிடந்த குலமக்களைக் காட்டிக் கொடுத்துவிட்டு, காங்கிரசுடன் கள்ளக் காதல் நாடகம் நடாத்தி, பதவிக் குழந்தையைப் பெற்றெடுத்த பரிதாபத்துக்குரிய கனம் ராமசாமியாரின் ரதகஜதுரகபதாதிகள் அனைத்தும், ஒரு ஏழையின்மீது,

> **'காமிக்' கவர்னர்!**
>
> "நாம் எல்லாம் ஆரியர்கள் என்பதை நீங்கள் அறியவேண்டும்"
>
> தேரழுந்தூரில் கம்பன் கலைக் கோயிலுக்கு அக் 10-ல் கல்நாட்டிய கவர்னர் பிரகாசா, தெரிவித்தாராம் இப்படி.
>
> "கம்பர் உங்களுக்கு எப்படியோ அதேமாதிரி எங்களுக்கு துளசிதாஸ் பெரியவர்"
>
> இதுவும், அவரே கூறியதுதான்! மேலே, அப்படி! கீழே இப்படி!!

'குடியாத்தத்தை'க் காட்டிடும் குடிலர்கள்!

பச்சை நோட்டுகளை எதிர்த்த பஞ்சைகள்!

பொது மக்கள் பணியன்றி வேறொர் அணிகலனோ படைக்கலனோ பெற்றிராத ஒரு சாமான்யர்மீது, நமது கழகப் பொறுப்பாளராகப் பணியாற்றிய அருங்குணவாளர், தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் மீது பாய்ந்தன!

சாய்ந்து போகிறான்பார், என்னை எதிர்க்கத் துணிந்த இந்த அற்பன்.

ஒழிந்து போகிறான்பார் எனக்கு அரசியல் ஒழுக்கம் கற்பிக்கத் துணிந்த இந்தப் பஞ்சை.

ஓடஓட விரட்டி அடிக்கிறேன்பார், கொள்கை பேசும் இந்தக் கோவிந்தசாமியை!

மந்திரிப்பதவி எனும் பெரிய இடத்தில் குடி ஏறிய எஸ். எஸ். ராமசாமியாரின், வீராவேசப் பேச்சிலே, சில துளிகள் இவை.

உண்மையிலேயே, இந்தத் தொகுதியில், மந்திரியான ராமசாமியாரின் மானம் மரியாதை என்பவைகளுக்கு குழிபறிக்கப் படுமா, அல்லது கோவிந்தசாமியின் உழைப்பு, உயர் குணம், சிறந்த உள்ளம் இவைகள் குப்பை மேட்டுக்குத் தூக்கி எறியப் படுமா, மக்கள் எதற்கு மதிப்பளிக்கப் போகிறார்கள், உழைப்பாளிக்கா உல்சாச வாழ்வினருக்கா, கொள்கையாளருக்கா, வேலைக்கோர் வேடமிடும் இலாபச் சூதாடிடுவோருக்கா, பாதசாரிக்கா, பங்களாவாசிக்கா, இன்மொழிக்கா, எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற போக்கினருக்கா, மக்கள் எதை மதிக்கப் போகிறார்கள், என்ற பெரும் பிரச்னை எழுந்தது—தமிழகம் ஆவலுடன் இந்தத் தொகுதியை நோக்கி நின்றது. அமைச்சர் பெருமான், ஆடினார் ஆடம்பரக் கோலத்தில், கிராமம் கிராமமாக ஓடினார், பாலம்வரும் பள்ளிக்கூடம் வரும், பங்குவரும் பவிசு வரும் என்றெல்லாம் ஆசைகாட்டினார், கோவிந்தசாமி கோயில்வேண்டாம் என்று கூறுபவன், நானோ காளி மகமாயி கோயிலுக்குப் பூஜை நடாத்தும் பக்தன், கோவிந்தசாமி அரசியல் பாலைவனத்தில் நடந்து செல்பவன், நான் காங்கிரஸ் சோலையிலே உலவுகிறேன், என்னைப்பின்பற்றுங்கள் ஏற்றம் பெறுங்கள் என்றெல்லாம் பேசினார்.

அமைச்சரின் எடுபிடியாக இருப்பது கிடைத்தற்கரிய பேறு என்று எண்ணிடும் 'பிரமுகர்கள்', புத்தாடை அணிந்து, பச்சை நோட்டுகளைப் பக்குவமாக மடித்துச்சட்டைப்பையில்வைத்துக் கொண்டு, யாரார் எதெதில் மயங்குவர் என்ற குறிப்பேட்டுடன் கிளம்பினர். கோவிந்தசாமியைச் சூழ்ந்து கொண்ட படை சாமான்யமானதல்ல! எதற்கும் அஞ்சாத படை! பின்புறமிருந்து குத்தவும் பின்வாங்காதபடை!

காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு மட்டுமல்ல, அதிலே குடிபுகுந்த கனம் ராமசாமியாரின் செல்வாக்கும், கூட்டாகிக் கூர்வாளாயிற்று! இந்தக் கூர்வாள் போதாதென்று, திராவிடர் கழகத்திடமிருந்து, குத்துவாள் பெற்றனர்!

திராவிடர் கழகம் இந்தத் தொகுதியில், தன் அபேட்சகருக்காக அல்ல' ஆதரவு தேடக் கிளம்பியது.

தோழர் கோவிந்தசாமியை இங்கு எதிர்த்து நின்றவர் காங்கிரஸ்காரர், கனம். ராமசாமியால் நிறுத்தி வைக்கப் பட்டவர்.

இவர், கல்வித்திட்டத்தை எதிர்த்தொழித்து திராவிடர் கழகத்தின் அன்புக்குப் பாத்திரமானவரல்ல!

இவர், இந்தி எழுத்தினைத் தார் கொண்டு அழித்து, திராவிடர் கழகத்தின் அபிமானத்தைப் பெற்றவரல்ல.

இவர், பிள்ளையாரை உடைத்துக் காட்டி, திராவிடர் கழகத்தின் பாராட்டு தலைப்பெற்றவரல்ல.

இவர், பார்ப்பானை வெளியேறு என்ற வீரமுழக்கமிட்டு, விடுதலை வீரர்பட்டியலில் இடம் பெற்றவரல்ல.

சினிமாவை விடு! சிலம்பம் எடு! என்ற சீரிய சித்தாந்தம் பேசி திராவிடர் கழகத்தின் மனதை வசியப்படுத்தியவருமல்ல, காங்கிரஸ்காரர்! மாடுதான் இவர் சின்னம்! எனினும் அவருடைய 'ஜாதகபலனை' 'முகபாக்யத்தை'ப்பாருங்கள், திராவிடர்கழகப்பேச்சாளர்கள் முகாம்அமைத்துக்கொண்டு அவருக்கு ஆதரவு திரட்டி, வெற்றிப் பாதை அமைத்துத் தருவோம், கவலை விடுக! களிப்புப்பெறுக! என்றுகூறினர், வாழ்க அந்த ஆபத்பாந்தவர்கள்! வாழ்க இந்த அனுதரட்சகர்கள்!!

இப்படி ஒரு 'படை' அமைத்து விட்டால் ஜனநாயகத்துக்கு என்னகுறை!!

கொத்தலாவலைக்கும் சேனநாயகாவுக்கும் தேர்தல் போரா, எழுதுக, விபரம் கூறுக, நிபந்தனைகளைப் பேசிக் கொள்க, ஆறுபேர் வருகிறோம், மும்மூன்று மணி நேரம் பேசக்கூடியவர்கள், முழு நீளக்கத்திக்கும் அஞ்சாத தீரர்கள், பெரியாரின் கழகத்தவர்கள், சினிமாக் கட்சிஅல்ல, சிலம்பக் கூடத்தார், என்று அறிவிப்பு வெளிவந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை, காணை கஞ்சனூர் தொகுதியில், திராவிடர்கழகப் பேச்சாளர்கள் அவ்வளவு அற்புதமான அரசியல் 'லாவகம்' காட்டினர்!!

இதோ காணுங்கள் அரசியல் கண்ணியத்தை விளக்கும் அத்தாட்சி—திராவிடர்கழகப் பேச்சாளர்கள் மாட்டுப் பெட்டிக்காக மார் உடையப் பாடுபட்டதற்கான ஆதாரச் சீட்டு—தேர்தல் கூட்ட நோட்டீஸ்.

காணை கஞ்சனூர் தொகுதி

ஜில்லா போர்டு தேர்தல் பொதுக்கூட்டம்.

இடம்: சங்கிருமங்கலம்.

★ **26—9—54** ஞாயிறு மாலை **6** மணிக்கு ★

பேச்சாளர்கள்:

M. சண்முகம், *நகர்மன்றத் தலைவர், விழுப்புரம்.*

குடந்தை S. K. சாமி, (தி. க.)

குடந்தை A. M. ஜோஸப், (தி. க.)

தஞ்சை ராஜகோபாலன், [தி க.]

பொருள்: "ஜில்லா போர்டு தேர்தலும் நமது கடமையும்"

குறிப்பு: **3—10—54**ல் நடக்கும் தேர்தலில்

தி. ர. நடராசக் கண்டர் அவர்களை

ஆதரித்து நுகத்தடி பூட்டிய இரண்டு

'காளைமாடு' சின்னத்தின் அருகில்

— இந்த கோடிட்டு ஓட்டு அளியுங்கள்.

லட்சுமி அச்சுக்கூடம், விழுப்புரம்.

'பன்னீர்த்துளி' பாணங்கள் வேறு, பாய்ந்தன!!

எங்கே அந்த ராஜா சிதம்பரம்?

பெரியார், தோழர் கோவிந்தசாமியை எதிர்க்கும்படி கூறவில்லை.

எனினும் பெரியார் கீறிய கோட்டினைத் தாண்டாத, தொண்டர் குழாம், கோவிந்தசாமியைக் கவிழ்க்கக் கிளம்பினர்!

கண்ணை மூடிக்கொண்டு பெரியாரைப் பின்பற்றுவோம் என்று பெருநெறி பேசிடும் சீலர்கள், பெரியார் இந்தப் பிரச்சினைபற்றி வாயை மூடிக்கொண்டு இருப்பது கண்டும், புயல் வேகப்பிரசாரம் புரிந்தனர். காங்கிரசுக்கு!

காரணம் என்ன? கோவிந்தசாமி ஒரு கண்ணீர்த்துளி! எனவே ஒழிக்கப்பட வேண்டியவர்!! அவர்களை ஒழிக்கப் பாடுபடுவது, பெரியாருக்குச் செய்யும் பெருந்தொண்டு! அவர் மனம் குளிர வேண்டுமானால், கண்ணீர்த் துளிகள் மீது கனல் கக்க வேண்டும்!—இப்படி ஒரு விசித்திரமான மனப்பான்மை இருக்கிறது, திராவிடர் கழகப் பேச்சாளர்களில் சிலருக்கு.

இத்தனை எதிர்ப்புகளையும் சமாளித்து, பெருமிதமான வெற்றி பெற்றார், வீரர் கோவிந்தசாமி.

கனம். ராமசாமியார் கட்சியையும் குலத்தையும் காட்டிக் கொடுத்தார் என்பதை எடுத்துக் காட்டிவிட்டனர்.

பகட்டுக்கு மயங்கமாட்டோம், பதவி கண்டு பல்லிளிக்க மாட்டோம், என்று வீரத்தீர்ப்பு அளித்துவிட்டனர், காணை-கஞ்சனூர் வட்ட வாக்காளர்கள்.

மந்திரிப் பதவி கிடைத்ததும் குல மக்களில் கூண்டுக்கிளிகளாக உள்ளவர்களிடம், பதவி மூலம்பெறக்கூடிய வசதிகள்பற்றி வகைவகையாக அளந்திட ராமசாமியாரால் முடிந்தது. அவர் பதவி பெற்றதன் மூலம், பல ஆண்டுகளாகப் பாடுபட்டு, பகை பலவற்றுக்கு அஞ்சாமல் வளர்த்த உழைப்பாளர் கட்சி உருக்குலைக்கப்படுகிறது என்ற உண்மை உணர்ந்து கொள்ளவே காலம் தேவைப்பட்டது. குல மக்கள் அதிர்ச்சி அடையக்கூடாது என்பதற்காக ராமசாமியார் மிக மிகப் பக்குவமாக, கோழிகொல்லப்பட இருப்பதைக் கூறாமலேயே இருந்து வந்தார், தேர்தலுக்குச் சில நாட்களுக்குமுன்புதான் 'கோழி' கொல்லப்பட்ட செய்தியே வெளியே தெரிந்தது. திடுக்கிட்டுப் போயினர். எனவே நிதானமாகவும் முறைப்படியும், மக்களிடம் உண்மையைக் கூறி, புதிய கட்சியை அமைத்திட நேரம் கிடைக்கவில்லை. ஆகவேதான் புதிதாகத் துவக்கப்பட்ட உழவர் கட்சி வெற்றி பல காண முடியாமல் போய்விட்டது. தோழர்கள் திருக்குறளார், கோபால கவுண்டர், கோவிந்தசாமி ஆகியோர் புதிய கட்சி அமைத்தபோது மக்கள் பேரார்வம் காட்டினர். என்றாலும் போதுமான காலமும் வசதியும் இல்லாததால், மந்திரியாரால் வெற்றிகள் காணமுடிந்தது. எனினும் ஜில்லாபோர்டுக்கே இந்தப் பாடுபட வேண்டி வந்ததே, பொதுத் தேர்தல் என்றால், எவ்வளவு சிரமமோ, என்னென்ன கஷ்ட நஷ்டமோ, எத்தகைய ஏமாற்றங்களோ என்று அமைச்சர் எண்ணி ஆயாசப்படாமலிருந்திருக்க முடியாது. தோழர் கோவிந்தசாமி, அமைச்சரை அவ்வளவு வேலை வாங்கிவிட்டார்!!

திறமை முழுவதும் செலவிட்டும் கோவிந்தசாமியைஒழித்துக்கட்டமுடியவில்லையே, என்ற எண்ணம் வேறு அமைச்சர் மனதைக் குத்திக்குடைந்த வண்ணம் இருக்கத்தான் செய்யும். அவர்மட்டுமல்ல, அவரை அமைச்சராக்கிய காமராஜரும் கலங்கியிருப்பார்.

யாராவது ஒருவருக்குப் பதவி கொடுத்தால், காங்கிரஸ் எதிர்ப்பாளர்களை வீழ்த்திவிடலாம் என்ற காமராஜீயம், நிலையானதல்ல, நேர்மை தருவதுமல்ல என்பதை விளக்கிவிட்டனர்.

வெற்றி கோவிந்தசாமிக்கு அல்ல, நேர்மைக்கு வெற்றி, அரசியல் ஒழுக்கத்துக்கு வெற்றி, உண்மைக்கு வெற்றி, உழைப்புக்கு வெற்றி, ஏழைக்கு வெற்றி, மக்கள் ஊழியருக்கு வெற்றி! பொறுமையும் பொச்சரிப்பும் கொண்டு, போகும் பாதை சரியா என்பதுபற்றிய கவலையுமற்று, அரசியலில் பொறுப்புணர்ச்சிகூடத் தேவையில்லை உரத்த குரலும் உழைக்கும் திறனும் இருந்தாலே போதும் என்று எண்ணியவர்களுக்கு, மக்கள் தக்க பாடம் கற்பித்தனர். கொள்கைப் பற்றும் நேர்மைத் திறனும் கொண்டு, சபலத்துக்கு ஆட்படாமல்' எதிர்ப்புக்கு அஞ்சாமல், எதிர்ப் பக்கம் இருப்போரின் மோட்டார் மெருகு, எடுபிடிகளின் எக்காளம், பணப்பெட்டியின் கனம், பதவியால் கிடைக்கும் 'பராக்கு' இவைகளைக் கண்டு பயப்படாமல், பொதுமக்களிடம் நம்பிக்கை வைத்து, உண்மையை உரைத்தால், ஏழையும் வெற்றிபெற முடியும் என்பதை, காணை காஞ்சனூர் தொகுதி விளக்கிவிட்டது. சிட்டு, வல்லூறை வீழ்த்திவிட்டது.

நான் எப்படி எப்படிக் கட்சி மாறினாலும், காட்டிக் கொடுத்தாலும், பதவி வேட்டை ஆடினாலும், என் குல மக்கள், என் வார்த்தையைத்தான் 'வேதமாக'க் கொள்வார்கள்; நீங்கள் எவ்வளவுதான் அரசியல் தத்துவங்களை அடுக்கடுக்காக எடுத்துரைத்தாலும், அவைகளை வெட்டிப் பேச்சு என்றுதான் தள்ளிவிடுவார்கள், என்று—எண்ணிட அமைச்சருக்கு ஆசை எழும்; ஏனெனில், அரசியல் ஒழுக்கக் குறைவாக அவர் நடந்துகொண்டபிறகும், தன்குலமக்களிடம் செல்வாக்கை, எப்படியோ திரட்டி இலாபம் பெற முடிகிறது. ஆனால், இந்தச் செல்வாக்கு நிலையானது என்றோ, நீண்ட காலப் புகழ் தேடித் தரக்கூடியதென்றோ அமைச்சர் கருதுவாரானால், அரசியல் இயக்க வரலாறு அறிந்தவர்கள், எள்ளி நகையாடுவர். இவர், தமக்கு இருப்பதாகக் கூறிக்கொள்ளும் செல்வாக்கைவிட, தரத்தில் எவ்வளவோ உயர்ந்த செல்வாக்கு, காமராஜருக்கு இருக்கிறது என்று எவரும் கூறுவர்; ஏனெனில், காமராஜ நாடார், நாடார்களின் தொகுதியில் அல்ல, நாடார்களின் ஆதரவைத் திரட்டி அல்ல, குடியாத்தம் தேர்தலில் வெற்றிபெற்றது! எனவே, அமைச்சர் இராமசாமியாருக்குக் கிடைத்தவரையில் 'ஆதாயம்' என்று கூறிக்கொள்ளமட்டுமே, வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இத்தகைய வாய்ப்புப் பலருக்குப் பல சமயங்களில் கிடைத்து, பிறகு ஆடிக்காற்றுப் பஞ்சான கதை அனைவருக்கும் தெரியும்.

மக்கள் மனதை ஈர்த்த மற்றோர் தொகுதி, லால்குடி.

"திராவிடத் தந்தை ஈ.வே. ராமசாமி அவர்களின் பொது வாழ்விலே லால்குடி வட்டம் அவரின் தாயகம் போன்றதாகும். 1928-ம் ஆண்டில் அவர் முதன் முதல் சுயமரியாதை இயக்க—மாநாடு கண்டது லால்குடி உயர்நிலைப் பள்ளியிலேயாகும்"

தலபுராணம்போலிருக்கிறதா! நான் கூறுவது அல்ல. லால்குடி தொகுதியில் நின்ற காங்கிரஸ் அபேட்சகர் தோழர் ராஜாசிதம்பரம் அவர்களை ஆதரித்து பெரியார் தொண்டர் என்ற பெயரினர் வெளியிட்ட துண்டுத்தாளில், உள்ள மணிவாசகம்.

இப்படிப்பட்ட தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக நின்ற ராஜா

'கண்ணீர்த்துளி' உணர்த்திய பாடம்!

பணம் படை எடுத்தது!

சிதம்பரத்தை, உங்களில் பலர் பார்த்திருக்கக்கூடும், பெரிய உருவம், பிரமுகர் கோலம், பெருநிலக்கிழார், வெற்றிலைப் பெட்டியும் கையுமாக வருவார், பெருங்குரலில் பேசிச் சிரிப்பார், கண்கள் பேசும், கட்டியம் கூறுவோர் உடன் வருவர், கனமான சரீரம், ஆயினும். அரசியல் 'கனம்' ஆக வேண்டும் என்ற ஆசை அவரைப் பிய்த்துப் பிடுங்கித் தின்றுகொண்டிருந்தது. அவர் ஓர் செல்வவான்—செல்வாக்கும் படைத்தவர்.

மகனிடம் சில மாண்புக் குறைவுகள் இருப்பினும், தந்தையாரின் பெருங்குணம் இருக்கிறதே, ராஜா முகத்தைப் பார்க்காவிட்டாலும் அவருடைய தந்தையாரின் முகத்தைப் பார்க்க வேண்டுமே என்று தொகுதி மக்கள் பாசத்தோடு பேசுவர். எடுத்தெறியப் பணம் உண்டு! எடுபிடிகள் ஏராளம்! அவருக்குச் சொந்தமான செந்நெல் விளையும் வயலின் வளம்கண்டு வசீகரம் பெற்றோர் அனேகர். அவர்தான் நின்றார், தோற்றார்! வெற்றி பெற்றவர், திராவிடர் கழகச் சிலம்பக்கூட வீரரிடம் சிக்கினால், தூக்கிக் 'கர்லா' சுத்துவார்கள், அப்படிப்பட்ட கச்சலான உருவம், கிராமவாசி, அம்பில் தர்மலிங்கம்.

ராஜா சிதம்பரத்துக்கு அம்பில் தர்மு, 'கைத்தடி' என்றுகூடப் பேசினர், அந்த அளவுக்கு இருவருக்கும் நட்பு. ராஜா சிதம்பரம் அரசியலில் நல்ல செல்வாக்கு பெறவேண்டும், அவர் மூலம் மக்களுக்கு நலன் கிடைக்கவேண்டும் என்ற நோக்கம் கொண்டவர் தர்மு. கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் உழைப்பாளர், உழைத்துவிட்டு எனக்கென்ன பங்கு என்று கேட்டவரல்ல. ராஜா சிதம்பரம், சென்ற பொதுத் தேர்தலின் போது, காங்கிரசினால் நாடு அடைந்த கேடுகளைப் பேசி எதிர்த்து நின்று வெற்றிபெற்று, ஐக்ய முன்னணியில் அமர்ந்து, சட்டசபையில் காங்கிரசாட்சியின் போக்கினைக் கண்டித்துப் பேசி வந்த கண்ணியர்.

அவர், இப்போது காங்கிரஸ் அபேட்சகரானார்! காரணம்கூடக் கூறினார்! வழுக்கி விழுந்த வனிதையும், பிடிபட்ட கள்ளனும்கூடத்தான் காரணம் காட்டமுடியும். ஆனால் பாபம், ராஜா சிதம்பரத்துக்கு உள்ள துணிவு அவர்களுக்கு ஏது!!

அவர் கூறினார், காங்கிரஸ் கட்சிதான் நல்ல கட்சி என்று கண்டு கொண்டேன், எனவே, அதிலே சேர்ந்துகொண்டேன், முன்பு காங்கிரசை வீழ்த்தச் சொன்னேன், செய்தீர்கள், இப்போது காங்கிரசை எழுப்ப வாரீர், என் சின்னம் மாடு, அதற்கு ஆதரவு தாருங்கள், சின்னம் எதுவாக இருந்தால் என்ன, கேட்பவன் நான், தெரிகிறதா, ராஜா சிதம்பரம் கேட்கிறேன், ஆக்கவும் அழிக்கவும், மாற்றவும் மாய்க்கவும், திறனும் உரிமையும் படைத்த ராஜா கேட்கிறேன்!! என்று துணிந்து கூறினார்; மிக மிக நம்பிக்கையுடன் களம் நுழைந்தார்.

அம்பில் தர்மலிங்கம், தேர்தலில் ஈடுபடக்கூடிய வசதி படைத்தவரல்ல, அதற்கான நிலைமைகூட இப்போது அவருக்கு இல்லை. கல்லக்குடி அறப்போரில் ஈடுபட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு, அங்கு நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் கிடத்தப்பட்டு, உயர்நீதி மன்றத்தில் வழக்காட முயற்சி எடுக்கப்பட்ட காரணத்தால், வெளியே வந்திருப்பவர்.

எந்த நேரமும் அவருக்கு அழைப்பு வரக்கூடும் சிறைபுக.

ராஜா சிதம்பரம், கட்சி மாறினார், காட்டிக் கொடுக்கிறார், வாக்காளர்களைத் துச்சமென்று எண்ணுகிறார் என்பது கண்டு தர்மு வெகுண்டெழுந்தார், ராஜாவிடம் சென்று அரசியல் ஒழுக்கம்பற்றிப் பேசிப் பார்த்தார், அவர் பெருஞ் சிரிப்பைப் பதிலாக அளித்தார், கருஞ்சட்டை வீரரே! வணக்கம்! என்று பேசினார், காங்கிரஸ் அபேட்சகராகிவிட்டார்,

சீறிப் பயனென்ன, கண்ணீர் சிந்திப் பயனென்ன, ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக்கும் போக்கைக் கண்டித்துப் பேசிமட்டும் பயனென்ன, அவர் அறிய, நாடு உணர, அவரைத் தோற்கடித்தே காட்டவேண்டும் எனறு துணிந்தார்; தேர்தலில் ஈடுபட்டார், திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் தர்மலிங்கம்.

இவருக்கு தர்முவா போட்டி! என்னய்யா வேடிக்கை இது! அவருடைய செல்வாக்கு எங்கே, இந்த வாலிபன் எம்மாத்திரம் என்று கூறினர். பிரச்சார பீரங்கிகள் முழங்கின! பிரமுகர்கள் ராஜா பக்கம் அணிவகுத்து நின்றனர்! மலை அசைகிறது, எலி என்ன செய்யும்!! பணம் படை எடுத்திருக்கிறது, பஞ்சை என்ன செய்யமுடியும்!! ராஜா வருகிறார், தர்மு எதிர்த்து நிற்பது எங்கனம்? என்று பேசிக்கொண்டனர், பலரும்.

ராஜா சிதம்பரம் சொந்தச் செல்வாக்கு, காங்கிரஸ் செல்வாக்கு இவற்றுடன், திராவிடர் கழகத்தின் செல்வாக்கும் ஆதரவும் எனக்கு உண்டு என்று கூறிக்கொண்டு கிளம்பினார். பெரியாரைப் பேட்டி கண்டார்; பிறரிடம் சென்று, பெரியார் பெரியார்தான், இந்தச் சில்லறைகள்போலவா, சென்றேன், கண்டேன், பேசினேன், நிலைமையைச் சொன்னேன், புரிந்து கொண்டார், என்று பெருமிதத்துடன் கூறிக்கொண்டார்.

தர்மு யார்? கண்ணீர்த்துளி! நான் யார் என்பது கிடக்கட்டும், தர்மு ஓர் கண்ணீர்த் துளி!! கவனமிருக்கட்டும்! கண்ணீர்த் துளியை ஒழிப்பதுதானே பெரியாருக்கு நீங்கள் செய்யக்கூடிய பெருந்தொண்டு, எனவே, வாருங்கள் என் பின்னாலே என்று திராவிடர் கழகத்தாரை அழைத்தார். முற்பகுதி பிடிக்கிறது, பிற்பகுதி அச்சம் தருகிறது என்றனர் சிலர்—சிலரோ 'கெட்டதுதான் கெட்டுவிட்டாய், கிட்டே வாடி மகளே!' என்று அழைத்த கிழக் காமுகன் போக்கில் அவர் பின்னோடு சென்றனர்!

தீர்த்துக் கட்டிவிட்டேன், இந்த தி. மு. க.வை என்று துந்துபி முழக்கினார்.

"திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள், அவரின் முதல் நேர்பர் விரோதி கண்ணீர்த்துளிகள் வெற்றியைக் கனவிலும் விரும்பமாட்டார் — மாறாக அவரின் பேரிலும் எழுத்திலும் கண்டித்துள்ளார்"

ராஜாசிதம்பரத்தின் ஆதரவாளர் வெளியிட்ட துண்டுத் தாளில் உள்ள திரு வாசகம் இது.

"ராஜாசிதம்பரம் வெற்றியைக் காமராஜ நாடார் விரும்புகிறார். பெரியார் ஈ. வெ. ரா. அன்புபூர்வமாக ஆசி கூறுகிறார்"

இதுவும் அது!!

"........திராவிடத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைக் காட்டிக் கொடுத்தவர்கள் — திராவிடத்தின் பிறவி எதிரிகளோடு கூடிக் குலவுகிறவர்கள்—ஆரியர்களை அணைத்துக்கொள்ளுவோம் என்று அகந்தை பேசுகிறவர்கள்......" இப்படி நமக்கு அர்ச்சனை ராஜாவின் ஆதரவாளரிடமிருந்து.

மனதுக்கே அதிர்ச்சி தரத்தக்கதான முறையிலே பிரசாரம் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், அவர்கள், இப்படியும் துண்டு நோடீஸ் வெளியிட்டனர்.

பண்பு வெற்றி பெற்றது!

'விடுதலை'யிலா அந்த விளம்பரம்!

"இவர் (தர்மு) வெற்றிபெற்றால் லால்குடி வட்டம் பெரியாருக்கல்ல — எங்கள் அறிஞர் அண்ணாவுக்கு என்பார்"

எழுதிய நண்பர், தனது திறமையைத் தானே பாராட்டிக்கொண்டிருப்பார்—இது அணுகுண்டு—இதனை வீசியானபிறகு தர்மு எப்படித் தப்பிப் பிழைக்கமுடியும், யாருக்கு ஓட்டு, பெரியாருக்கா? அண்ணாத்துரைக்கா? என்று ஒரு போடுபோட்டிருக்கிறேன், பயல்கள் திக்கித் திணறி திக்காலொருவர் ஓடிவிடுவர், தேர்தலில் ராஜா ஜெயிப்பார், எல்லாம் என் பிரசார பலம், மக்கள் என்றால் என்ன பெரிய பிரமாதமா, மகுடி ஊதுவதைப் பொறுத்திருக்கிறது, என்று பெருமையாகப் பேசிக்கொண்டிருப்பார், அரசியல் பிழைகளை அடுக்கடுக்காகச் செய்துகொண்டு, அதன் மூலம் அந்தஸ்த்து உயரும் என்று ஆவலோடு இருக்கும் அந்த அன்பர்! திட்ட வட்டமாகக் கேட்கிறார், நோட்டீஸ் மூலம், கொட்டைஎழுத்துக்களில் வெளியிட்டு,

லால்குடி வட்டம் பெரியாருக்கு ஆதரவு அளிக்கிறதா?

இனத் துரோகிகள் -- காட்டிக் கொடுத்தவர்கள்-கண்ணீர்த் துளிக்கு ஆதரவளிக்கப்போகிறதா?

இதுதான் இன்றைய லால்குடி தேர்தல் பிரச்னை.

தி. மு. க. கண்ணீர்த்துளி-கம்யூனிஸ்டு--ஆரியர்--நம் பரம விரோதிகள் என்கிறார் திராவிடத் தந்தை, இதில் முதல் நெ. விரோதி 'கண்ணீர்த்துளிகள்"!

இப்போது உங்கள் ஓட், யாருக்கு?

பெரியார் தொண்டன் கேட்கிறார்!!

இதற்கு என்ன பதில் தரப்போகிறார்கள் — நிச்சயம் ராஜாசிதம்பரத்துக்குத்தான் எங்கள் ஓட்டு என்பது தவிர வேறு என்ன பதில் இருக்க முடியும் இதற்கு, என்று, மக்களை உணரமுடியாத அந்த நண்பர் எண்ணிக்கொண்டிருந்திருப்பார் பாபம்! ஏமாந்தார்!!

பெரியாரின் பெயரை இழுத்து வைத்து இவர்கள் பேசியதை மக்கள் எப்படி நம்புவார்கள், அவர்தான் இந்தத் தேர்தலில் எனக்குத் துளியும் அக்கரை இல்லை என்று கூறிவிட்டாரே என்று கேட்கத் தோன்றும்.

பெரியார், ராஜாசிதம்பரத்தை ஆதரித்துப் பேசவில்லை, எழுதவில்லை, அதுபோலவே, ராஜாசிதம்பரத்தை ஆதரித்த திராவிடர் கழகத் தோழர்களைக் கண்டிக்கவில்லை, அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தாரில்லை.

மக்கள் மனதிலே குழப்பம் மூளத்தக்க வகையில், திராவிடர் கழகத் தோழர்களில் சிலர் பேசியதைப் பெரியார் கண்டிக்காது விட்டது, ராஜாசிதம்பரத்தின் துணிவை அதிகப்படுத்திவிட்டது. ஒரு படி மேலே சென்று, தனது தேர்தல் விளமபரத்தை 'விடுதலை'யில் வெளியிடவே செய்தார். உண்மையிலேயே, இது, ராஜாசிதம்பரம் பெற்ற வெற்றிகளில் முக்கியமானது.

எங்கு நோக்கினும் மூவர்ணக்கொடி, எவரைப்பார்ப்பினும் கதருடை, எங்கும் காங்கிரசாட்சியின் செல்வாக்கு என்று இருந்த நேரத்தில் துணிந்து தனிக்குரலாகக்கிளம்பிய ஏடு விடுதலை! அதைத்தீண்டுவது தேசத் துரோகம் என்று ஏசினர். விடுதலை விற்பனையாளர்கள் தாக்கப்பட்டனர். எனினும் நெஞ்சு உரத்துடன், காங்கிரசைக்கண்டித்து எழுதிய ஏடு விடுதலை. திராவிடரின் விடுதலை முரசாக இதயநாதமாக விளங்கவேண்டுமென்பதற்காக, அந்த ஏடு தளிர் நடைபோட்டபோது ஆதரவு ஊட்டிய அன்பர்கள் பலர். அப்படிப்பட்ட விடுதலையில், மாட்டுப் பெட்டிக்கு ஓட்டுப் போடுங்கள் என்ற விளம்பரம் வெளிவரச் செய்தார் ராஜாசிதம்பரம் என்றால், உண்மையிலேயே பெரிய வெற்றிதான்! நமக்கெல்லாம் தலை இறக்கம்! அவரோ, மார்பை நிமிர்த்தி நடந்தார், விடுதலையைக் கண்டீர்களா, என் தேர்தல் அறிக்கையைப் படித்தீர்களா என்று கேட்டார். உன்கண்ணைக் குத்திய கத்தி இதுதான், தடவிப்பார் இதன் கூர்மையை என்று ராஜா கூறினார். பெரியாரின் பெருந் தொண்டர்கள், என்னென்ன எண்ணினார்களோ நானறியேன், இருந்துவிட்டு வந்தவன் என்ற முறையில் நான் கலங்கினேன்.

ராஜாசிதம்பரம் வெளியிட்டதேர்தல் விளம்பரமும், மிகச்சாமர்த்தியமாகத் தயாரிக்கப்பட்டது. அதைப் படிப்போருக்கு, பெரியாரின் ஆலோசனையின் படியும், அனுமதியின் பேரிலும், ஆதரவுடனும்தான், ராஜாசிதம்பரம் காங்கிரஸ் அபேட்சகராக நிற்கிறார் என்று தோன்றும். பெரியாரால் பாராட்டப்பட்ட ஆரூடம் ஆறுமுகம் பிள்ளையிடம் ஐந்து கேள்விக்கு ஒருரூபாய் அனுப்பி விடைபெற்றுக் கொள்ளலாம் என்று ஓர் விளம்பரம் விடுதலைவெளியிட்டால், என்னஎண்ணுவோம். ராஜாசிதம்பரம் இதையும் மிஞ்சும்படியான செயலை மிகமிகச் சாமர்த்தியமாகச் செய்துவிட்டார். அவர் வெற்றி அது. ஆனால் மக்கள் தந்த தீர்ப்போ, வேறு! அது மகத்தானதோர் பாடம்!!

ராஜாசிதம்பரம் திராவிடர் கழகம் நமக்கு எப்படியும் ஆதரவு தந்துதான் தீரும், ஏனெனில், திராவிடர்கழகத்துக்கு முன்னேற்றக்கழகம் என்றால் எட்டி., என்று ஓர் தவறான கணக்குப் போட்டார். மக்கள்வேறு ஓர் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தார்கள். ராஜாசிதம்பரம் போன்ற, காற்றடித்த பக்கம் திரும்பும் கனவான்கள், மக்களாட்சியின் மாண்புக்கே கேடு செய்பவர்கள், இத்தகையவர்களை ஒழித்துக் கட்டத்தான் வேண்டும் என்று முடிவு செய்தனர்—செய்து காட்டினர். மலை தகர்ந்தது, சிற்றுளி வென்றது! ஜனநாயகம் காப்பாற்றப்பட்டது.

என் தொகுதி மக்கள் என்னை அறிவார்கள்—மிக நன்றாக!

என் தொகுதி மக்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு — நான் அறிவேன்.

நான், இப்போது காங்கிரஸ் கட்சியில் சேர்ந்ததை, என் தொகுதிமக்கள் ஆதரிக்கிறார்கள்.

இந்த மாவட்டத் தேர்தலில் எனக்கு என் தொகுதி மக்கள், பெருவாரியான வாக்களித்து வெற்றி அளிக்கப்போகிறார்கள். அதிலிருந்தாவது அண்ணாத்துரை கூட்டத்தார் என் செல்வாக்கை அறிந்துகொள்ளட்டும் என்று அன்பர் ராஜா சிதம்பரம் பிரசாரக் கூட்டத்தில் பேசினாராம்.

இப்போது, அதே தத்துவத்தின்படி அவர் என்ன செய்யவேண்டும்?

இந்தத் தேர்தலில் அவர், எக்காரணத்தாலோ வெற்றிபெற்றிருந்தால், பெருஞ் சிரிப்பாலேயே, நம்மை நையாண்டி செய்திருப்பார்!

நான் காங்கிரசில் சேர்ந்ததை மக்கள் ஆதரித்துவிட்டார்கள் — தெரிகிறதா தெளிவற்றவனே!—என்று ஏசுவார்.

இப்போது, அவர் தோற்கடிக்கப்பட்டதால், அவர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்ததை, அந்தத் தொகுதிமக்கள், எந்தத் தொகுதி மக்கள் அவரை எம்.

கண்ணைக் குத்திடும் கத்தியாகலாமா?

ஆரூடம் பொய்த்தது!

எல், ஏ. ஆக்கினரோ, அதே மக்கள் கண்டிக்கிருர்கள் என்பதுதான் பொருள். நம்பிக்கை இல்லை என்று மக்கள் கூறிவிட்டனர்.

அரசியலில் நாணயம் இருக்கவேண்டும் என்ற கொள்கையில் ராஜாவுக்கு நம்பிக்கை இருக்குமாஞல், 'ரோஷத்தோடு' தமது எம், எல், ஏ. பதவியை 'ராஜிநாமா'ச் செய்துவிட்டு, அதே தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராகத் தேர்தலில் நிற்கவேண்டும். அதுதான் நேர்மை. பொதுமக்களுக்கு பொறுப்புணர்ந்தவர்கள் காட்டவேண்டிய மரியாதை.

காங்கிரஸ் எதிர்ப்பாளர் என்ற முறையில்தான், ராஜாவுச்கு, லால்குடி வட்ட வாக்காளர்கள் முன்பு பெருவாரியான ஓட் அளித்தனர்,

அமைச்சர் இராமசாமியாவது, கதர்ச்சட்டையோ பட்டுச் சட்டையோ, கட்சிக்காக அல்ல, நான் என் குலத்துக்கு நன்மை செய்பவன் என்ற காரணத்தால், எனக்கு, என் குல மக்கள், வெற்றி தேடித் தந்தனர் என்று (அரசியல் தத்துவமல்ல!) அரசியல் அங்காடிப் பேச்சுப் பேசலாம்!! ராஜா சிதம்பரம் அதுபோலவும் பேசமுடியாது-ரெட்டியார்கள் தொகுதி அல்ல, லால்குடி!!

ஆகவே, ராஜா அவர்கள் எம் எல். ஏ. பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு, காங்கிரஸ் கட்சியில் சேர்ந்த தன் காரணங்களை விளக்கித் தொகுதி மக்களுக்குக் கூறிவிட்டு, காங்கிரஸ் அபேட்சகராகத் தேர்தலுக்கு நிற்க வேண்டும், முடியுமா என்று கேட்கின்றனர்! அறை கூவியும் அழைக்கின்றனர், அம்பில் தர்மலிங்கத்துக்கு வெற்றி தேடித் தந்த வாக்காளர்கள்!!

மகத்தான அரசியல் பாடம் கிடைக்கும்படிச் செய்த தர்முறையைப் பாராட்டுகிறேன். வெற்றிக்குஉழைத்த அன்பர்களுக்கெல்லாம்வணக்கம்கூறிக்கொள்கிறேன்.

அம்பில் தர்மலிங்கம், தோழர் கோவிந்தசாமி, அரக்கோணம் கிருஷ்ணசாமி, எடப்பாடிதாண்டவன், திருவொற்றியூர் கணபதி, போன்ற தோழர்களிடம் இவ்வளவு புயலுக்கு இடையிலும் பொதுமக்கள் நம்பிக்கை வைத்து ஆதரவளித்த மாண்பு, எண்ணி எண்ணிப் பூரிக்கத்தக்கது, அந்த நம்பிக்கை மேலும் வளரும் வகையிலே, கிடைத்துள்ளவாய்ப்பைக் கொண்டுநமதுநண்பர்கள்பணியாற்றி நற்பெயரெடுத்து, அதன் மூலம், கழகத்துக்கு பொலிவும் வலிவும் தேடித்தர வேண்டுகிறேன்.

மக்கள் தீர்ப்பின் மூலம் தேர்தலில் வெற்றி பெற, பொதுமக்களிடம் நெருங்கிய தொடர்பும் தோழமையும் மெத்தப் பயன்படும் என்ற பாடம் கிடைத்திருக்கிறது.

இந்த அரிய பாடத்தை ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள நமது கழகத் தோழர்கள் கூர்ந்து கவனித்துப் பயன் பெற வேண்டுகிறேன்.

ஒரு அரைடசன் பேர்வழிகள் எப்படியோ வெற்றி பெற்றுவிட்டார்கள், பூ! பூ! இது என்ன பிரமாதம்! இதற்கு ஏன் இவ்வளவு பீத்திக்கொள்கிருர்கள் என்று பேசித் தமது நெஞ்சு வலியைத் தீர்த்துக்கொள்ள முயலும் திருவாளர் என் மனக்கண்முன் தெரிகிருர்!

நான் மகிழ்வது, மாவட்ட ஆட்சி மன்றங்களை கழகம் கைப்பற்றிவிட்டது என்று அல்ல — காங்கிரசிடம் தான் மாவட்ட ஆட்சி மன்றங்கள் சிக்கிவிட்டன — நான் மகிழ்வதற்குக் காரணம், அரியபாடம் பெறத்தக்க வகையிலே சில வெற்றிகள் கிடைத்துள்ளன என்பதால்.

இதே மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தலில், முன்கூட்டியே, நாம், திட்டமிட்டு, வசதிகளைத் தேடிக்கொண்டு, பணியாற்றி இருந்தால், பல இடங்களில் வெற்றி பெற்றிருக்க முடியும்.

ஆனுல் அங்ஙனம் நாம் ஈடுபட்டிருந்தால், பெரியாரிடம் நம்மைப்பற்றி நயமாகவும் பயமாகவும் பேசி, அவரைக்கொண்டு நம்மை எதிர்த்தொழிக்கச் செய்யும் சீரழிவான செயலில், சின்டுமுடிந்துவிடும் சிறுத்தொண்டர்கள் முனைந்து வேலைசெய்திருப்பர். பூசல்கள் முளைத்திருக்கக் கூடும். ஏசலைத் தாங்கவேண்டி இருந்திருக்கும், எனினும் வெற்றி, பல இடங்களில் கிடைத்திருக்கும் என்பதை உணர்ந்திருக்கிறேன், எனினும், பகையும் பூசலும் கிளம்பவேண்டும், பண்பு அழிந்தொழியவேண்டும், என்று எண்ணும், கூடிக் குடி கெடுப்போரிடம் பெரியார் தம்மை ஒப்படைத்துவிட்டிருப்பதால், விபரீதம் கூடாது என்பதற்காகவே, விலகி இருப்பது நல்லது என்று கருதினேன். இல்லையெனில் மேலும் சிலபல வெற்றிகள் கிடைத்திருக்கும்.

ஏசல் மூலம் பூசல் ஏற்படவேண்டும் என்று எண்ணிடும் அவசரசாமிகளின் போக்கை ஏற்றுக்கொள்ள மறுத்து, லால்குடி, கஞ்சனூர் தொகுதிகளில் திராவிடர் கழகத்தினரில் பலர், நமது தோழர்களுடன் ஒத்துழைத்த பண்பைப் பாராட்டுகிறேன். அவர்கள் காட்டிய நேர்மைக் குணத்துக்கு என் நன்றி.

இந்தச் சிறிய வெற்றியைக் கண்டு' தாவிக்குதிக்காதே! இது சகஜம்' ஏழெட்டு இடங்களில், எப்படியோ சில துகள் தப்பிப் பிழைப்பதுண்டு என்று ஏளனம் பேசி, மன எரிச்சலுக்குச் சாந்தி தேடிடும் சிலர், உளர். இந்த வெற்றிக்கு நான் மகிழ்வதற்குக் காரணம், அபாரமான அரசியல் தெளிவும், ஆரூடவல்லமையும் இருப்பது போல எண்ணிக்கொண்டு, ஒரு அவசரசாமி 'விடுதலை'யில் "ஜில்லா போர்டு தேர்தலில் ஒரு நல்ல பணவேட்டையும் பதவிவேட்டையும் ஆடிப் பார்த்துவிடலாம் என்று மனக்கோட்டை கட்டினர்களே, கழகத்தைப் பிளந்து பாழாக்கிய கோடாரிக் காம்புக் கூட்டத்தார், இன்று அந்த மனக்கோட்டை என்னவாயிற்று? மறைமுகமான (முக்காடிட்டு) ஓட்டு வேலிகளில் தலைநீட்டுகின்ற 7, 8 பேர்வழிகள்கூட மண்ணைக் கவ்வப் போகிறார்கள்" என்று 23-9-54ல் தீட்டினர். இந்த ஆரூடத்துக்குப் பிறகு,— ஆரூடமோ, சாபமோ நானறியேன்!— நமது தோழர்கள் வாகை சூடினர் என்ருல் மகிழாமலிருக்க முடியுமா! ஏதேதோ எண்ணத்தான் தோன்றுகிறது, ஆனுல் ஊசல் நடையில் ஏசி உயிரை வாங்கிவிடுகிறேன், மாதம் அதற்காக மூன்று நூருவது தந்தால் போதும் என்று கூறிப்பெற்று, மகத்தான 'தியாகம்' செய்துவரும் மாவீரர் "ஏழெட்டுச் சிறுவர்களா! உங்களுக்கு இத்தனை எண்ணங்களா?" என்று கேட்பார்.

நமது எண்ணம், திராவிடத்துக்குப் பணியாற்றும் வாய்ப்பு நமக்கு அளிக்கப்படவேண்டும் என்பதுதான். அதை அளிக்கும் பொது மக்கள் மாவட்ட ஆட்சி மன்றத்தில் பணிபுரியவும் நம்மில் சிலருக்கு வாய்ப்பளித்துள்ளனர். அதுகண்டே அகமகிழ்கிருேம். ஆதரவு அளித்த மக்களுக்கு நன்றி கூறிக்கொண்டு, வெற்றிபெற்ற தோழர்களை வாழ்த்துகிறேன். வணக்கம்.

★

அறப்போர் வென்றது!

திராவிடநாடு

காஞ்சி] 17—10—54 [ஞாயிறு

டில்லி சந்திப்பு!

வெற்றி! வெற்றி!! — என்கிறார்! கொத்தலாவலா.

ஆமாம்! ஆமாம்!! — என்கின்றனர், டில்லி வட்டாரத்தினர்.

ஆனால், இலங்கையில் தவிக்கும் ஏழுலட்சம் திராவிட மக்களும்—எதிர்காலம் எப்படியோ! — எனத் திகைக்கின்றனர்.

உலகத்தில் எங்கும் காணாத நிலை—அங்கே. நாடு எதுவும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள், மக்கள்! பொன் விளையும் பூமியிருந்தும் புசிக்க வழியற்றுச் சென்றோடிய மக்கள்.

இந்தப் பிரச்னை, பெருந்தீ, அதனை அணைத்திட முயல்வதாக டில்லி காட்டிக்கொள்கிறது! தாங்களும் ஆர்வமுடனிருப்பதாக இலங்கைக் காட்டிக் கொள்கிறது!!

கொத்தலாவலாவுக்கு இலங்கையில் நிலைமை சரியில்லை. ஏதாவது செய்து தீரவேண்டிய கட்டம்! பண்டிதநேருவுக்கும் இலங்கையுடன் ஒரு சமரசத்துக்கு வந்தாகவேண்டும். ஏனெனில், அவர் ஆசிய ஜோதி!!

இதுதான், 'டில்லி சந்திப்பின்' முக்கிய இரகசியம்.

இந்தச் சந்திப்பால், பலனுண்டா! எதிர்காலம்தான் கூறவேண்டும், எனத் தேசிய ஏடுகளே எழுதுகின்றன. எத்தனை ஆண்டுகள் ஆகுமோ!!

'நாடற்றவர்கள்' என்றும், அவர்களை எந்த நாட்டுக் குடிமக்களாக்குவது என்றும், அவர்களைப்பற்றி அனுதாபமும் சிரத்தையும் இல்லாதவர்களா கூடிப்பேசி முடிவுகாணமுடியும்?

இந்தப் பிரச்னையை, கவடுசூதின்றி கவனித்தால் ஒழிய, ஒரு முடிவு காண்பது சாத்தியமல்ல, அந்த நல்லெண்ணம் உண்டா, இருவருக்கும்? நம்முடைய, சந்தேகம், இது.

விளைவை, பொறுத்துப் பார்ப்போம்.

★

"எனக்குப் பின்!"

"தன்னைவிட்டால் வேறு கதி ஏது?"—என்ற தருக்குக்கு ஆளாகிவிட்டோர், சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம், நம்பியிருப்போர் தலையில் குட்டியவண்ணமே காலத்தை ஓட்டுவர்—குட்டுப்படுவோர் கொஞ்சம் முரண்டினால், மிரட்டுவர். "எனக்கென்ன? இதை நம்பித்தானா வாழவேண்டும்; என்னால் தாங்க முடியவில்லை. இது ஒரு முள் கிரீடம். பதவிச் சுமையை இறக்கிக் கொள்ளப்போகிறேன்" என்று சொல்லுவர். சொல்லாமலே செய்யலாம், இதனை. ஆனால், நாலுபேர் காதுக்கு எட்டவும், அவர்களிலே இருவர், "ஐயையோ! நீங்கள்தானே அநாதரட்சகர்; இப்படி விட்டுவிடலாமா, எங்களை? நம்பிக் கிடக்கும் எம்மைத் தவிக்கவிடாதீர்! தயை காட்டுவீர்" என்று கெஞ்ச, இவர் மிஞ்ச, கடைசியில் "எல்லோரது விருப்பத்துக்காகவும் இந்தச் சுமையை இன்னும் சிலநாள் சுமக்கிறேன். ஒரு நிபந்தனை; தள்ளாத வயதில், பொல்லாத சுமையைத் தாங்கும் என்னை, யாரும் எதுவும் கேட்கக்கூடாது. என் இஷ்டப்படியே நடக்கவேண்டும்" என்று முரண்டியோரின் தலையில் காலை வைத்துக்கொண்டு, வெற்றிக்களிப்புடன் வீரஉலா வருவர்—மீண்டும் தலைவராக! தயாளசீலராக! பொதுஜன பூஷணமாக!

※

இந்த நினைவு மின்னுகிறது; அன்பர் நேரு அவர்கள் அண்மையில் விடுத்துள்ள அறிக்கையொன்றைக் காணும்போது.

அரசியல் வாழ்க்கையில், அவருடன் தொடர்புகொண்டோருக்காயினும் சரி, மாற்றுக் கட்சியிலிருந்தாலும் அவர் எத்தனை 'மாற்று' உடையவர் என்பதை சரியாக உரைத்துப் பார்க்கும் வல்லமைகொண்டோருக்காயினும் சரி, எவருக்கும் அவரது அறிக்கையைக் காணும்போது மனம் நெகிழ்வே செய்யும்.

உருக்கம், ஆசைப் பெருக்கம், அறிவுரை, ஜனநாயக விளக்கம்—இத்துணையும் கலந்து, கண்களில் நீரைக் கொண்டு வருமளவுக்கு வேதனையுடன் விளங்குகிறது—அந்த அறிக்கை.

பிறரது மனதில் அவ்வளவு உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய வகையில் அந்த அறிக்கை இருக்கிறதென்றால், அந்த அறிக்கையில் தென்படுவது, வெறும் எழுத்துக்கள் அல்ல; பண்டித நேருவின் வேதனைக் கண்ணீராகும்.

அவர் தெரிவிக்கிறார்—"பல இடங்களிலும், பத்திரிகைவாயிலாகவும் கேட்கிறார்கள்— எனக்குப் பின், யாரிருக்கிறார்கள், இந்தியாவுக்கு என்று? இது, எனக்குப் பெரிய வேதனையாக உளது". என்று.

உண்மை! பலர் கேட்கிறார்கள்—அதற்கு யாரும் பதில் தரமுடியாதும் திகைக்கிறார்கள். இதனைக் காணும்போது; தனக்கு வேதனை விளைவதாகக் கூறுகிறாரே, பண்டிதர், அந்தப் பண்பு பலரிடம் காண முடியாத ஒன்று! தான் ஏறிச் சென்று அமர்ந்த இடத்துக்கு இன்னொருவரைத் தயார் செய்வதும், தன் செல்வாக்கை எட்டுமளவுக்கு இன்னொருவனை வளரவிடுவதும், சராசரி அரசியல் வாழ்வில், எட்டிச்சுரை! இனிக்கப் பேசுவோருண்டு—இதுபற்றி; புளிக்கும் அவர் போக்கை நினைத்தால், "எல்லாம் தானே!", என்கிற இந்த சர்வாதிகாரப் போக்கு, மக்கள் மன்றத்தை மதிக்கும் நல்லவர்களிடம், இராது! அந்தப் பண்பு, பண்டிதரிடம் இருப்பதாக, அறிக்கை கூறுகிறது. அகமகிழ்கிறோம்! அவரது பெருந்தன்மையையும் பாராட்டுகிறோம்!!

"ஜனநாயகத்தில் இப்படி ஒருவருக்காகவே எல்லாம் நடக்கிறது—என்னும் எண்ணம் வளரக் கூடாது"

என்று, ஜனநாயகப் பண்பை தெளிவுடன் தெரிவித்திருப்பதைக் காணும்போது, அந்தப் பண்பு வளரவும்—மிளிரவும் பாடுபடுவோர், பாராட்டவே, செய்வர்! நாமும், அந்த நற்சொல்லுக்குப் பாராட்டுகிறோம், அவரை!!

ஆனால், அதே நேரத்தில், ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல 'இதுவும் மாயைதானா?' எனும் ஐயம், நம் உள்ளத்தில் மின்னு

வதையும், தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

*

கண்டிருப்பதோ, விஷக்காய்ச்சல்! எனக்குப் பதில் நகரத்து டாக்டர் வந்தால் தான் குணப்படுத்தமுடியும் எனக் கூறுகிறார், நாட்டு வைத்தியர். அதைக் கூறுகிற அதே நேரத்தில், 'என்னாலும் முடியும், என்னிடமும் மருந்திருக்கிறது.' என்றும் சொல்லிக் கொண்டேயிருந்தால், என்ன பொருள்? அந்த வைத்தியர், நோயாளியை டாக்டரிடம் அனுப்ப மனதாரச் சம்மதிக்கிறார், என்பதா. நாளைக்கு யாரும் தன் மீது பழி போடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்கிற முன்ஜாக்கிரதையோடு தெரிவிக்கிறார் எனக் கொள்வதா. நோய் கண்டவனிருக்குமிடத்துக்கும் டாக்டர் இருக்குமிடத்துக்கும் இருபது மைல் தூரமிருந்து, 'நாட்டு வைத்யரை விட்டால் வேறுகதியில்லை' என்கிற சூழ்நிலையும் இருக்கிறபோது சொன்னால், வியாதியஸ்தனின் சுற்றத்தார் என்னவென்று எண்ணுவர். காலையோ, கையையோ பிடித்துக்கொண்டு— கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். டாக்டர் வந்து சேருகிறவரையாவது பாருங்கள். ஐந்தோ, பத்தோ கூடப்போனாலும், பரவாயில்லை—பாருங்கள். என்று தானே, கெஞ்சுவர்.

அதுபோல, 'எனக்குப்பின்' என்று மக்கள் மன்றம் பேசுவதைக் குறித்து வேதனையும் கிலேசமும் கொண்டு, விலகிக்கொள்ள விரும்புவதாக, மாநில முதலமைச்சர்களுக்கெல்லாம் முன்னாலே அனுப்பியிருக்கிற பண்டிதர், அதே அறிக்கையில் அடிக்கடி தெரிவித்திருக்கிறார்— **"எனக்கு வயதாகிவிட்டதென்று எண்ணாதீர்கள்! போதிய ஊக்கமும், வேலை செய்யும் ஆர்வமும் நிறைய உள்ளது. ஆகவே, யாரும் கவலைப்படவேண்டாம்! என்னாலும் முடியும்! இவையெல்லாம் கவனிக்க எனக்கும் சக்தியிருக்கிறது!"**, என்று.

ஜனநாயக விளக்கம்! அதற்கு அருகிலேயே சக்தி விளக்கம்!! எப்பொருள், கொள்வது?

*

"வேலைகள் அதிகமாகிவிட்டன. இதனால் படிக்கவும் சிந்திக்கவும் நேரமில்லை. படித்துச் சிந்தித்துப் பல பயனுள்ள காரியங்களை நாட்டுக்குச் செய்யவேண்டும் எனும் நல்லாசை எனக்கு இருக்கிறது..."

அவருடைய மணிவாசகம் இது. மனதார நாம் பாராட்டக்கூடிய வாசகமுங்கூட. உலகமே போற்றும் உன்னதத் தலைவர் என்றாலும், இன்னும் படிக்கவேண்டும் என்று அடக்கத்தோடு அவர் கூறும்போது, ஏடுகளின் மீதும், அவைகளின்வாயிலாகப் பலர் வகுத்துச் சென்றிருக்கும் வகை வழிகளின் மீதும், அவருக்கு இருக்கும் அளவிலா ஊக்கம் தென்படுகிறது. அதே நேரத்தில், அவருடைய வேதனையும் விளங்குகிறது. **சிந்தித்துப் பல பயனுள்ள காரியங்களைச் செய்ய வேண்டுமாம்**—செப்புவது, பண்டிதர். சிந்தித்து—பயனுள்ள — இலேசான சொற்களா இவை? அதுவும் யாருடைய வாயிலிருந்து வரும் சொற்கள். இங்குள்ள ஏடுகள், ரஷ்யாவையும் சைனாவையும் வாதுக்கு அழைத்து, பாரீர் எமது பண்டித நேருவின் பராக்கிரமத்தை என்று தோள் தட்டுகின்றன. அவரோ தெரிவிக்கிறார்—சிந்தித்து, பயனுள்ள காரியங்களைச் செய்ய வேண்டுமாம். இதன்மூலம், அவரது உள்ளத்தை ஏதோ ஒன்று உறுத்திக் கொண்டிருக்கிறதெனத் தெரிகிறது—என்னைப்பற்றி வானளாவப் புகழ்கிறார்கள்; ஆனால், பயனுள்ள காரியம் எதைச் செய்தேன் என்றே எனக்குத் தெரியவில்லை. அந்தக் காரியங்களைச் செய்யவும் வழி தெரியவில்லை. அவைகளைச் சிந்தித்து செயலாற்றவேண்டும். அதற்கு அவகாசம் வேண்டும்—இதுவாகத்தானே இருக்கமுடியும்? இல்லையென்றால், சிந்தித்து பயனுள்ள காரியங்களை செய்யவேண்டும் என்பாரா. பராக்குக் கூறும் பல்லக்குத் தூக்கிகள் கிடக்கட்டும்—உண்மையில் பண்டிதரின் இந்தச் சொல், எவரையும், அவர்பற்றி எண்ணவே செய்யும். ஏன் இவ்வளவு வேதனைகளையும், இப்போது வெளியிடவேண்டிய அவசியம் வந்தது? அதுவும், சீனாவுக்குச் செல்லுகிற நேரத்தில். ஆண்டு ஆறாக, அவரது சர்க்கார்பற்றிக் கூறாதாரில்லை—அன்றோர் நாள், இன்று காங்கிரசுக்குக் கைகொடுக்கும் ஆந்திரகேசரி பிரகாசம் பேசினார், "யார் இருக்கிறார்கள், இந்தப் பண்டித நேருவுக்குப் பிறகு? காங்கிரஸ் காங்கிரஸ் என்று துதி பாடுகிறீர்களே, அந்தக் காங்கிரசைக் கட்டிக் காக்கக்கூடிய அகில இந்தியத் தலைவர் யாரிருக்கிறார்கள், பண்டித நேருவுக்குப் பிறகு?" என்று. அதெல்லாம், அவரது செவிகளில் விழவில்லையா? அந்நியநாடுகளிலிருந்து வருவோரும் போவோரும் "எல்லாம் சரிதான்; ஆனால், இந்தப் பண்டித நேருவுக்குப் பிறகு இந்தியா எக்கதி அடையுமென்று யாராலும் கூற முடியாது" என்று எத்தனையோ முறை எழுத்துக்களாகவும், பேச்சுக்களாகவும் தெரிவித்திருக்கின்றனரே—அதெல்லாம் தென்படவில்லையா?

இப்போதுமட்டும், அவைகளின் மீது கவனமும் கருத்தும் செல்லுவானேன்?

பிறரது கருத்தைக் கவரக்கூடிய அறிக்கையொன்றைத் தயாரித்து அனுப்புவானேன்?

அதிலே ஜனநாயக விளக்கமும், கூடவே, சக்தி விளக்கமும் இருப்பானேன்?

*

"பத்தினியாக நடக்கவேண்டும் என்ற ஆசைதான் எனக்கு; என்ன செய்வது? பாவிகள் மத்தியில் சிக்கிவிட்டேன்; தப்பமுடியவில்லை. என் 'தலைவிதி'போலும் இது. இனியாவது அப்படி நடக்கலாமா என்று யோசிக்கிறேன்" என்று விதியரசியொருத்திப் பேசினால், கொஞ்சம் வேடிக்கையோடு பார்ப்பர், அவளை. பேச்சு உலருமுன்பே, நடுத்தெருவுக்கு வந்து நாயகர்களை வேட்டையாடும் வேதனையில் ஈடுபட்டால், 'பத்தினிப் பேச்சு கேட்டோர், வியப்போடு பார்ப்பர். இந்த நிலையில் தான், இன்று அல்ல, எப்பொழுதும் இருந்துவருகிறார், பண்டித நேரு. அவர் கூறாத கொள்கையில்லை. பேசாத பொதுவுடைமையில்லை. முழக்கமிடாத ஜனநாயகத் தத்துவம் கிடையாது. ஆனால், அப்படியெல்லாம் பேசிவிட்டு, வழக்கம்போல், டில்லி மாளிகையின் சிறப்புவாசத்தில்தான் சிந்தை மகிழ்ந்திருக்கிறார்.

"ஒருவரையே நம்பியிருக்கும் மனோபாவம் கூடாது."

"ஒரு அரசியல் தலைவரை, கடவுளாக்கும் பூஜா மனோபாவம் கூடாது"

என்கிற புனித உரைகளை, இன்றல்ல, முன்பே கூறியிருக்கிறார், பண்டிதநேரு. நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சிங்காரச் சென்னையின் 'ஐலண்டு' மைதானத்தில், பேசிய போதே செப்பினார். ஆண்டுகள் உருண்டோடினவேயொழிய, அவர் பழைய மொந்தையில் தான் கிடந்தார். அதற்குப் பிறகு—நாட்டின் நடைமுறைகளில் தன்னுடைய நல்லெண்ணங்களை மலர்விக்க வேண்டிய கட்டங்கள் பல தோன்றியதுண்டு, பண்டி

தருக்கு. "எனக்குப்பின்...". என்பதை, உள்ளபடியே எண்ணியிருந்தாரானால், அதுபோதெல்லாம் பலரை ஆதரித்து, அந்த நிலைக்குக் கொண்டுவர எண்ணியிருக்கலாம். ஆனால், பண்டிதர் பிரதமர் பதவி மட்டும் போதாது—காங்கிரசுக்கும் நானே 'ராஷ்டிரபதி' ஆகிறேன் என்றார். காங்கிரசுக்கு 'அதிர்ச்சி வைத்யம்' தரப்போவதாலேயே அந்தப் பொறுப்பை ஏற்க விரும்புவதாகக் கூறினார். தான் சுமந்திருக்கும் இலாகாக்கள் பலதை, பலருக்குக்கொடுத்து, ஜனநாயகப் பண்பைக்காட்டிக் கொண்டிருக்கலாம். காலம் ஓடியதே தவிர, அந்த மலர்ச்சிகள் ஏதும் ஏற்படவில்லை. எனினும் இப்போது வெளியிடுகிறார்— வேதனையாக இருக்கிறது. விலகிக் கொள்ளலாமா என்று நினைக்கிறேன், என்பதாக. அதே நேரத்தில், தனக்கு வேலை செய்யும் சக்தி இன்னும் இருப்பதாகவும் அறிவிக்கிறார். நாட்டு வைத்யர் கதை ஞாபகத்துக்கு வருகிறது. 'அந்த இடந்தானடி ஆச்சரியமாயிருக்கிறது', என்கிற வாசகத்தையும் நினைவூட்டுகிறது.

*

கனி பறிக்கச் சந்தர்ப்பமிருந்தபோது தவறிவிட்டு, மரம், இலை தழையுடனிருக்கும்போது, 'கனி பறிக்க விரும்புகிறேன். கனி பறிக்கச் செல்லுகிறேன்', என்றால், என்னவென்று எண்ணுவது. நாட்டின் மனதில், நல்மாற்றங்களைச் செய்யவேண்டிய சந்தர்ப்பங்கள் பலவற்றை இழந்துவிட்டு— காரணம் என்ன தெரியுமா? அப்போது காலில் முள் குத்தியிருந்தது. அந்த முள்ளை எடுத்துவிட்டு, மரம் ஏறி, கனி பறிக்கப் போகிறேன்.— என்று கூறுவதுபோல, அரசுப் பொறுப்பை யார் தலையிலாவது கட்டிவிட்டு, தனியாகச் சிந்தித்து பலனுள்ள பல காரியங்களைச் செய்யப் போவதாகத் தெரிவித்தால் என்ன பொருள்? இவர், 'பலனுள்ளதைப் பற்றிச் சிந்திப்பார்! பாராள அமர்த்தப்பட்டவர் பொம்மையாக இருப்பார். அவர் செய்வதை 'பயனற்றதென' மக்கள் எண்ணவேண்டும்— பண்டிதர் அடிக்கடி அபயம் தருவார், 'ஜனங்களே கவலைப்படாதீர். நான், சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்' என்று. அமர்த்தப்பட்டவர், சக்கையாக இருப்பார். இவர், அப்போதும் வீட்டிலிருந்தபடி அரசோச்சுவார்.

[11-ம் பக்கம் பார்க்க]

தங்க மெடல்

தங்கப்பதக்கம்!— பரிசளிக்கப்பட்டிருக்கிறது, அவர்களுக்கு. வீரா! தீரா! உத்தமா! உதாரா! சித்துப்புரிந்தவா! சிந்தனைச் செல்வா! என்று புகழ் மாலை சூட்டி— போற்றிய பிறகு.

அவர்களும் அதை ஆனந்தத்தோடு பெற்றுக்கொண்டு, அதனை அளித்தவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசியிருக்கின்றனர்.

வீரச் செயல்களைப் புரிந்தோருக்கும், விந்தைமிகு காரியங்களைச் செய்தோருக்கும், பதக்கமளிப்பதும் பாராட்டளிப்பதும் சகஜம். அதனை, அவர்கள் பெற்றுக்கொள்வதும், சகஜம். அது போன்றதல்ல, இது! பரிசு பெற்றவர்கள், பாமரர்களல்ல; பாமரர்களையெல்லாம் பரமனடிக்கு அனுப்பும் பக்தசீலர்கள்! பலர் ஏற்றிப்போற்றும் குலகுருமார்கள்!!

விழா, விமரிசையாக நடைபெற்றதாம்— துண்டுப் பிரசுரங்கள் போட்டு. பொதுக் கூட்டம் ஒன்று கூட்டி, தலைமை வகிக்கப்பெங்களூர் பத்திரிகாசிரியர் ஒருவரைத் தேடிப்பிடித்து, பாராட்டுரை வழங்க மைசூர் சப்-ஜட்ஜ் ஒருவரை அழைத்து வந்து, பிரசங்கம் செய்ய ஈரோடு வக்கீல் சுப்ரத்னம் அய்யரையும், கோவை வக்கீல் வி. ஏ. கிருஷ்ணமூர்த்தியையும் வரவழைத்து கோலாகலமாக நடைபெற்றிருக்கிறது, விழா.

"வீரர்கள் இருவர்," என்று அழைத்துப் பதக்கம் பெற்ற பாக்கியசாலிகளை, மக்கள் முன் நிறுத்தியிருக்கின்றனர் — "மகா உத்தமர்களே! தங்கள் திருவாய் திறந்து செப்பவேண்டும் சில அருள் மொழிகள்!" என்றும் வேண்டியிருக்கின்றனர். அந்த 'வீரர்களும்' "என்ன செய்துவிட்டோம்? எங்கள் குருநாதருக்கு நாங்கள் செய்ய வேண்டிய கடமையைத்தான் செய்தோம்! கடமையைச் செய்யத்தானே கடவுள் எங்களைப் படைத்தான். மகாஜனங்களே! நீங்களும் கடமையைச் செய்து கடவுளைப் பஜியுங்கள்" என்று கூறிவிட்டு, மறுக்காமல், அளிக்கப்பட்ட இரண்டு தங்கப் பதக்கங்களையும் பெற்றுக்கொண்டு, இறங்கிச் சென்றிருக்கிறார்கள், இறைவனடி நாடி எழுந்தருளியிருக்கும் மடத்துக்கு!

அவர்கள் பெயர், **மகாலிபட்டர், கோவிந்தாச்சார்.** சிருங்கேரி மடத்து முக்கிய சிஷ்யர்கள்! செத்துப்போன சந்நிதானத்துக்கு அருகிலேயே இருந்து இதுவரை பணிபுரிந்தவர்கள்!! 'சந்நிதான' சான்சு கிடைத்தாலும், கிடைக்கலாம் என்ற நிலையிலிருப்பவர்கள். அவர்களுக்குத் தான் வீரபதக்கமும், வெற்றி விழாவும் அளிக்கப்பட்டிருக்கிறது.

சந்நிதானத்தின் சாவோசை இன்னும் அடங்கியபாடில்லை— குமரி முதல் இமயம் வரையுள்ள வேத வேதியர்களின் விமர்சனங்கள், ஏடுகளில் வந்த வண்ணம் உள்ளன. சிருங்கேரி மடமே, சோபையிழந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது! மறைந்த குருநாதரை எண்ணி அவரது தலைமையின் கீழிருந்த மார்க்கசீலர்கள், வேதனையும், சோதனைக்காளானோமே என்கிற துயரமும் அடையவேண்டிய நேரம். விழா, நடக்கிறது! பதக்கம் பரிசளிக்கப்படுகிறது! மடத்திலிருந்தபடி மக்களுக்கு இதோபதேசம் செய்ய வேண்டிய மார்க்க பந்துக்கள், சிந்தித்து வந்து, தரப்பட்ட பதக்கத்தைப்பெற்றுக்கொண்டு, 'சாதாரணர்கள்' போலச் சென்றிருக்கிறார்கள்!!

வீட்டிலே, அழுகுரல்! வெளியிலே புகழ்மாலை!!— வீணரும், விரும்பான். இந்த வேத விற்பன்னர்கள் அதனையும் விடவில்லை. அய்யனடி சேர்ந்தாரென வையம் கலங்குகிறது, குருநாதரைப்பற்றி— இந்த மெய்யன்பர்கள், தங்கப் பதக்கமும், பாராட்டுரையும் பெறுகின்றனர். விழாவுக்குத் தலைமை தாங்கியவர் பத்திரிகாசிரியர்! பாராட்டுரை அளித்தவர் நீதிபதி! பிரசங்கம் செய்தவர்கள் வக்கீல்கள்!! விழா நடைபெற்றது, மக்கள் மத்தியில்,

வீரபதக்கம் அளிக்கத்தக்க வகையில், அந்த இரு ஆத்மஞானிகளும் சாதித்த காரியம் என்ன?

அருள்நாடிவரும் பக்தர் குழாத்துக்கு, 'மறைந்தவர்' காட்டிடாத மகோபதேசங்களைச் செய்தனரா? அல்ல! அல்ல!! துவைதத்துக்கும் அத்வைதத்துக்கும் இடையிலிருக்கும் சண்டையைக் களைந்து, சமரசம் ஏற்படுத்தினரா? இல்லை! இல்லை!! அப்படிப்பட்ட 'ஆத்மஞான' காரியங்களுக்காக அல்ல, 'தங்கமெடல்' அளிக்கப்பட்டது. ஆற்றோடு போக இருந்த சிருங்கேரி மடாதிபதியைக் காப்பாற்ற, தமது உயிரையும் துச்சமென எண்ணாது, முயன்றாராம் மகாபலபட்டர்!

அந்த 'வீரகாரியத்துக்காக' அவருக்கு, ஒரு மெடல்!

தண்ணீரடித்துக்கொண்டு போகாமல் 'ஸ்வாமிஜி'யைத் தூக்கிக் கொண்டுவந்த மகாபலபட்டரை ஆற்றோடு போய்விடாமல் காப்பாற்றினாராம் கோவிந்தாச்சார்!!

இந்த 'வீரகாரியத்துக்காக' அவருக்கோர், மெடல்!!

நீரிலிருந்து 'ஸ்வாமி'யை உயிரோடு கொண்டுவரவில்லை, மகாபலர்! எனினும், பாராட்டப்படுகிறார்!! ஏனெனில், துணிச்சலோடு, செய்தாராம் அந்தத் தீரச்செயலை. அதற்காக!! அந்தத்தீரர் திண்டாடிச்சென்ற பாதையில், மகாபலபட்டரும் செல்லாமல் காப்பாற்றினாராம், கோவிந்தாச்சார். அதற்காக, அவருக்கும் பாராட்டு!! மெடல்!!

இந்தப் பாராட்டு விழாவை ஏற்பாடு செய்தவர், சிருங்கேரி மடத்தின் "மாஜி" ஏஜண்டான நஞ்சுண்டையா என்பவர். இதற்கு ஒத்துழைத்தவர்கள்கள், ராஷ்ட்ரீயசேவா சங்கத்தினர்!

*

கள்ளக்காதலன்; உண்டு, அவளுக்கு. கணவன் உயிரோடிருப்பது, திருட்டின்பம் பெறத்தடையாயிருந்தது. என்ன செய்வது! கள்ளப்புருஷனின் ஆசையோ தேள்போலக் கொட்டுகிறது; கை பிடித்தவனோ, வாளாகிவிடுவானோ கண்டுவிட்டால் —என்ற அச்சமும் வாட்டுகிறது. எப்படிச் சகிப்பது மோகபாதையை? கடைசியில், கணவனை, கட்டிலறைக்கு வந்தபோது சாதுர்யமாக சாகடித்தாள் அந்தச் சண்டாளி! மஞ்சத்துக்குக் கீழே மணாளனின் பிணம்—மஞ்சத்திலே, காதலன் தரும் இன்பம். போதை முடிந்ததும், தான் செய்த தவறு பெரிதெனத் தெரிந்தது—ஊர் தூற்றுமே என்ற அச்சமும் பிறந்தது. உடனே அண்டை வீட்டு அலமு, எதிர் வீட்டு கோமளா, அடுத்த வீட்டு அம்சா, ஆகியோரை அழைத்து வைத்து, கூ! கூ! வெனக் கூக்குரலிட்டு அழுதாள். அவர்களும், ஐயோ—பாவம்! என்றனர். அன்று மாலை, சுடுகாட்டுக்குப் போயிற்று, பிணம். வழிமுழுதும், அவள்வடித்த கண்ணீர் கொஞ்சமல்ல! 'உடன்கட்டை ஏறுவதாகவும் சொன்னாள் 'உத்தமி'!! மறுநாள் ஊரெல்லாம் துண்டு நோட்டீசுகள் பறந்தன. "பத்தினியுண்டோ, இவள் போல்! மணாளனைப்பிரிந்து வாழாமங்கை! கலியுக அதிசயம்," என்று. அதைக் கண்டு, ஊரே பேசிற்று. அன்று இரவிலோ, அவளுடைய காதலன் கட்டியணைத்தபடி கூறிக் கொண்டிருந்தான்—கண்ணே! உன்கற்பை ஊரெல்லாம் பேசும்படி செய்துவிட்டேன். எல்லாம், என் வேலைதான். அச்சாபீஸ் செலவு ரூபாய் ஐந்தடி, கிளியே!"

இந்தக் கதைக்கும் சம்பவத்துக்கும் ஒட்டுப் போடவில்லை, நான்! கவனத்துக்கு வந்தது — கடமையைச் செய்கிறேன். 'சந்திரோதயம்' நாடகத்திலே ஒரு மடாலயசீன் உண்டு! சன்னிதானத்தைச் சாய்க்க தலைமைச் சீடர்கள் இருவர் முயல்வதுபோல!! பல மடாலயங்களில், அதுபோல 'பல' நிகழ்ந்ததும் உண்டாம். என்ன செய்வது? இகலோக இச்சைகளைத் துறந்து பரலோகப் பாதை காட்டிடும் பக்தர்களானாலும், அவர்களையும் ஆசாபாசங்கள் ஆட்டிப் படைக்காமலிருக்குமா? அவரது சிஷ்யகோடிகள் எனச் செப்பித் திரிவோர் வேண்டுமானால், 'சிஷ்யர்களின் மகாத்மியம்' 'ஆண்டவர்களின் அரும்பெரும் அடியார்கள்' என்று ஆயிரமாயிரம் கதைக்கலாம். அவர்கள் என்ன செய்வார்கள்! மனிதர்கள்தானே! மடாலயத்தையும், சந்நிதானத்தையும் காணும்போது, சபல ஆசைகள் ஏற்படத்தானே செய்யும்?

"பாதாமாம்! பாலாம்! பல்பக்காம்! பக்திப் போர்வையில் பரமானந்தத்தையன்றோ அனுபவிக்கிறார் குருநாதர். ஏண்டா மூடா! நீயும் தானிருக்கிறாய், இந்த மடத்தில்— ஒடுக்குத் தம்பிரானாக. என்ன பயன் கண்டாய்? காலை முதல் மாலை வரை, குருநாதர் என்ன செய்கிறார் என்பது உனக்கு நன்றாகத் தெரியும். கொட்டுமுழக்கும், வேட்டுச் சப்தமும் 'அரகர நமப்பார்வதிபதே' யும், பக்தர்கள் காதைச்செவிடாக்க முடியும். உன் கண்ணைக் காணவில்லையோ, இங்கு நடக்கும் காட்சிகளை. மண்ணும் பொன்னும் வெறுத்ததாகப் பேசுகிறார். ஆனால், இருப்பதோ பெரிய ஜாகிர். பொன்னோ!—கணக்கு வழக்கில்லை. அணிந்திருக்கும் ஆடையே தங்க நூலிட்டு, இடையில் பட்டு ஓடப் பளபளக்கிறது!! மார்பிலும், காதிலும் தொங்கும் ஆபரணங்களைக் கொண்டே ஒரு குடும்பம், தன் வாழ்நாளை நகர்த்த முடியும். பெயரோ, பெரிய மடம்! நீயோ, ஆண்டி!! எப்போது, நீயும் அவரைப்போல ஆகலாம்! அந்தச் சுகத்தை அனுபவிக்கலாம்"— என்று, அவர்கள் "மனக் குரங்கு", கூத்தாடாமலா இருக்கும்! வெளியிலே சொல்லமுடியாதே தவிர, மனம் எண்ணாமலா இருக்கும்! ஆகவே, சிருங்கேரி மட'ஸ்வாமி' செத்ததற்கும்— தங்கமெடல் பரிசளிப்புக்கும் சம்பந்தம் உண்டு என்று நான் கூறுவதாக யாரும் எண்ணிட வேண்டாம். விழா நடைபெற்றது உண்மை— ஏற்பாடு செய்தவர் மாஜி ஏஜண்டு என்பதும் நிஜம்— தலைமை வகித்தவர் பத்திரிகையாளர்— பாராட்டியவர் சப்-ஜட்ஜ்— வந்து பேசியோர் வக்கீல்கள்— 'தங்கமெடல்' பெற்றவர்களோ, ஓடும் பொன்னும் ஒன்றெனக் கருதும் ஆத்ம ஞானிகள்! விபரம் இது!! விஷயத்தைப் புரிந்து கொள்ளவேண்டியவர்கள்— நாம், அல்ல—பக்தர்கள்!! ★

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இதைத் தவிர, வேறென்ன விளைவு ஏற்படமுடியும்? எனவே, அன்பர் பண்டிதரின் கூற்றில் அறிவுமணம் வீசினாலும், அவரது போக்கினைக் கண்டு வருவோருக்கு ஐயம் ஏற்படவே செய்கிறது. அதனால்தான் நாமும் அவர் கூற்றைப் பாராட்டுகிறோம்— ஆனால், தலைப்பில் தந்ததைப்போல, சந்தேகமும் கொள்ளுகிறோம்.

தனி மனிதர்களை நம்பி வாழும் நாடுகளில், இவ்வண்ணம் "போறேன் இதோ, போறேன் இதோ". என்று அந்த பெரியவர்கள் மிரட்டுவதும், 'போகாதிர் போகாதிர் எம் தலைவா.' என்று பலர் புலம்புவதும், சகஜமாகிவிட்டது. இதனை நன்றாக அறிவோம் நாம். அதனாலேயே, அதிகமாக ஐய முறுகிறோம்— இப்போது ஏன் இப்படிப் பேச நேர்ந்தது, பண்டிதருக்கு? எது, மனதை உறுத்துகிறது? எதற்காக இப்படிப் பேசுகிறார்!

பண்டிதர் இன்று பேசுகிறார். அவரது பழைய சகாவான ஆச்சாரியார் இதுபோலப் பலமுறை பேசினார். ஆனால், சந்தர்ப்பம் கிடைத்தபோது, 'கோட்டைக்குள்' உண்டான குத்துவெட்டுகள்மூலம் மூலையைவிட்டு வெளியே வரும் வாய்ப்பு நேர்ந்தபோது, 'எனக்கேன்' என்று கூறவில்லை. 'என்ன செய்வது? நாடும் நானும் ஒன்று பிற்றே; தள்ளாத வயதிலும் சுமையைத் தூக்குகிறேன்' என்று சலிப்போடு சொல்லிக்கொண்டு அரச பீடத்தில் அமரவே செய்தார். பிறகு, அதைவிட்டு அவரைக் கிளப்பப்பட்டபாடு, அடடா, கொஞ்சமல்ல; சாமான்யமல்ல. ஆச்சாரியார்மீது கட்சிக்குள்ளும், நாட்டிலும் ஏற்பட்ட அளவுக்கு எரிச்சல், பண்டித நேருவுக்கு ஏற்படுவதற்கு ஏதுவில்லை. எனினும், ஏன், இவ்வண்ணம் தெரிவிக்கிறார்?

ஏதோ ஒன்று அவர் மனதை உறுத்த ஆரம்பித்திருக்கிறது—அது எது?

தனக்குப் பின் 'வாரிசு' இல்லையே என்ற கவலையா?

அது இப்போது அல்ல; முன்பே ஏற்பட்டிருக்கவேண்டும்.

தன்னால் பயனுள்ள பல காரியங்களைச் சிந்தித்துச் செய்யமுடியவில்லை—என்பதா?

இதற்கு வேண்டிய வசதிகளையும் வாய்ப்பையும் தேடிக்கொள்ளும் நிலையிலிருப்பவர் அவர். "நான்தான் பிரதம மந்திரி. ஆனால், அன்றாட அரசுப் பொறுப்புகளை இன்னார்தான் கவனித்துக்கொள்வார். நான் ஆலோசனைகளைமட்டும் தருவேன்" என்று சொன்னால் தட்டிப் பேசுவோர் கிடையாது.

இருந்தும், இன்று, இவ்வாறு அறிக்கைவிடும் மர்மம் என்ன? நாட்டில், அவர் எதிர்பார்த்த ஐக்கிய சக்தி குறைந்து வருவதா—கோட்டைக்குள்ளேயே சண்டைகளும் சமர்களும் மலிந்து வருவதா—அரசின் ஊழல்களைப்பற்றி கணக்குக் கமிட்டியினர் கண்டனம் தெரிவிப்பதா — தன்னையும் எதிர்க்கப் பலர் கட்சிக்குள்ளேயே உருவாகிவிட்டனர் என்பதா? அது, எது? ஆலோசிக்கத் தூண்டுகிறது, நம்மை—அவரது கடந்தகால செயல்களும், திடீர் அறிக்கையும்.

நமது ஐயம் பலிக்குமா? அல்லது நமது பாராட்டைப் பெறும் வகையில் நடப்பாரா?—இப்போது சொல்லமுடியாது. ஏனெனில், அவர் ஒரு 'வானவில்'. ★

இயல்பு

திராவிட முன்னேற்றக் கழகம், இப்போது அடைந்துள்ள வளர்ச்சி காரணமாக, கழகத்தோழர்கள்பேசுவதிலும் எழுதுவதிலும் மிக்க பொறுப்புணர்ச்சி காட்டவேண்டும், வீர முழக்கம் என்று எண்ணிக்கொண்டு ஆர்ப்பரிப்பில் ஈடுபடக்கூடாது, ஏதாவது திமிர்த்திட்டங்களைப் பேசி வைப்பதால் மக்களிடம் எழுச்சி ஏற்படும் என்று எண்ணிக் கொண்டு எதையேனும்பேசி வைக்கக் கூடாது, வளர்ச்சியடையாதநிலையில்இருக்கும் கழகமானால், வாய்வீச்சிலே ஈடுபடலாம், தி. மு. க அப்படியல்ல, ஒரு பருவ மங்கை போன்ற நிலையில் இருக்கிறது, அடக்கமும் பொறுப்புணர்ச்சியும் தேவை என்று பேசினார் நமது கழகத் தோழர்கள்.

அதைச் சாக்காகக்கொண்டு' ஆபாசமான கோலத்தில் இளமங்கையின் சித்திரம் போட்டு, இனி இதுதான் தி. மு. க. என்று 'தினத்தந்தி' கூறுகிறது.

தி. மு. க. ஒரு பருவ மங்கை என்று கழகத் தலைவர்களே பேசியுள்ளனர்; எனவே, இனி தி. மு. க. எங்கள் ஏட்டில் இப்படித்தான் காட்சிதரும் என்று வாதாடுகிறது, 'தினத் தந்தி'.

இதுகண்டு கழகத் தோழர்கள் சிலர் மனம் நொந்து, ஏன் 'தினத்தந்தி' இப்படி நமது கழகத்தை இழிவு செய்கிறது என்று கேட்கிறார்கள்.

'தினத்தந்தி'யிடமிருந்து ஏன்நீங்கள் பண்பான போக்கை எதிர்பார்க்கிறீர்கள்! இதுதான் அந்த ஏட்டின் பிழைக்கும் வழி!! கவலைபடவேண்டாம்.

பொறுப்பும் அடக்கமும் கழகத்துக்குத் தேவை என்பதை விளக்க, பருவமங்கை என்ற உவமை கூறப்பட்டது. அதை 'தினத் தந்தி' கேலி செய்யப் பயன்படுத்திக்கொள்கிறது. அதன் ஆசையும் தீர்ந்து போகட்டுமே!

மற்ற அரசியல் கட்சிகள் ஜோதிடர் போல; தி. மு. க. ஒரு டாக்டர் போன்றது—ஏனெனில் மற்றக் கட்சிகள், மக்களுக்கு அது கிடைக்கும் இது கிடைக்கும், என்று நல்வாக்குக் கொடுக்கின்றன, தி. மு. கழகமோ, மக்களிடம் இன்னின்ன குறைபாடுகள் உள்ளன, இந்தக் கைய நலிவுகள் உள்ளன என்று 'டாக்டர்' போல எடுத்துக் கூறிவருகிறது, என்று கூறியிருக்கிறோம்.

பண்பு உணரும் ஏடானால், தி. மு. க. ஒரு டாக்டர் என்று 'கார்ட்டூன்' போட்டிருக்கும்! தினத்தத்தி, போடுமா?

தி. மு. க. திராவிடரின் விடுதலை முரசு, இதய வீணை, போர் வாள், என்று பலப்பல உவமைகள் கூறி இருக்கிறோம்—சித்திரங்கள் தீட்டியிருக்கலாம்—ஆனால் பண்பு வேண்டுமே!

'தினத்தந்தி' இந்த உவமைகளை எல்லாம் விட்டுவிட்டு, பருவமங்கை என்ற உவமையைமட்டும் பிடித்துக்கொண்டு, பிழைக்கும் வழி தேடுகிறது. சுபாவம்!!

முத்தும் பவளமும், மாற்றுக் குறையாப் பசும்பொன்னும் எதிரே வீசினாலும், பன்றி, மலம் எங்கே இருக்கிறது என்றுதான் மோப்பம் பிடித்துக்கொண்டு தேடி அலையும். பன்றி ஏன் இவ்வளவு கேவலமாக நடந்துகொள்கிறது என்று எண்ணிக் கவலைப்படுவது? பன்றிதானே! அது அப்படித்தான் நடந்துகொள்ளும்.

'தினத்தந்தி' தி. மு. கழகத்தைப் பருவமங்கை என்று சித்திரம் போட்டுக் காட்டி, அதனையும் மேலாடையின்றியும், அரை ஆடையுடனும் போட்டுக் காட்டி, வாசகர்களுக்கு சிறிதளவு 'காமரசம்' ஊட்டி, காசு திரட்டுகிறது என்றுதான், இதற்குப் பொருள். வேறென்ன!

இங்ஙனம் 'தினத்தந்தி' தீட்டுவதும் ஒருவகைக்கு நல்லதுதான்—ஏனெனில் பலர், 'தினத்தந்தி' தி. மு. க. செய்திகளைத் தருகிறது, எனவே எமது ஆதரவுக்குப் பாத்திரமான ஏடு, என்று மனமயக்கம் கொண்டுள்ளனர்— அந்த மனமயக்கம் போகும்.

அரை ஆடை அழகியாக தி. மு. கழகத்தைச் சித்தரிப்பது கண்டு ஆயாசப்படவேண்டாம், கழகம் இதனால் இழிவு பெறாது, தினத்தந்தியின் இயல்பு இது என்பது மக்களுக்குப் புரியும். விளைவு அறிய அதிக நாட்களும் தேவையில்லை,

★

23. வேதனையும் வெட்கமும்

நெடுமாறனின் வணக்கத்திற்கு தங்கள் பதில் வணக்கத்தை மரியாதையோடு தெரிவித்தனர், புஷ்பாவும், பாஸ்கரும். ஆனால், நல்லமுத்துவின்மேல் வீசப்பட்ட வெறுப்புப் பார்வை மாத்திரம் மாறவேயில்லை.

ஒரு விநாடி மௌனம் நிலவியது பின், பாஸ்கர், சர்க்கார் வக்கீல் கிருஷ்ணசாமி பக்கம் திரும்பி "என்ன சார்! ஆறுமுகம் ஒன்றுமே சொல்லலையா?" என்றார், மறுபடியும். கிருஷ்ணசாமி பாஸ்கரை ஏமாற்றத்தோடு பார்த்தார்.

பாஸ்கர் ஆறுமுகத்தின் பக்கம் திரும்பி "ஏண்டா, ஆறுமுகம்! நிசத்தைச் சொல்லிப் போடுடா; உன்னை ஒருவரும் ஒன்றும் செய்ய மாட்டார்கள்" என்றார்.

ஆறுமுகம் என்ன கூறுவான்? பேசாமல் தலையைக் குனிந்து கொண்டான்.

இதற்குள் நெடுமாறன் முன்வந்தார். "நீங்கள் கவலைப்படவேண்டாம், சார்! நான் இவனோடு பேசி உண்மையை வெளிப்படுத்துகிறேன்" என்றார்.

"நானொன்றும் இவனைப் பயமுறுத்தப் போவதில்லை சார். அவன் பூரா விஷயத்தையும் ஒளிக்காமல் கூறிவிட்டால், அவனுக்கு நல்லதுதானே?" என்றார், பாஸ்கர்.

"இதிலே, உண்மைக் குற்றவாளி யாரென்று நிச்சயம் தெரிந்தாகனும். நாட்டின் பல பிரச்னைகளுக்கு இந்த வழக்கு ஒரு பாடம்" என்று கூறினாள், புஷ்பா. அவள் கூறும் போதே, அவளுடைய கண்கள் நல்லமுத்துவை ஒரு பார்வை பார்த்துத் திரும்பியதை நெடுமாறனும் கவனித்தார்.

"நீங்கள் ஏனம்மா வீணாக மனதைப் புண்படுத்திக்கொள்கிறீர்கள். நல்லவர்கள் – கெட்டவர்கள் யார் யாரென்பதை அறியமுடியாதவாறு உலகமே குழம்பிக் கிடக்கிறது. பொறுத்திருந்து பாருங்கள்" என்று பல அர்த்தங்களை உள்ளடக்கி மறுபதில் கூறினார், நெடுமாறன்.

புஷ்பாவும் பாஸ்கரும் பேசாமல் கிருஷ்ணசாமியைப் பார்த்தனர். கிருஷ்ணசாமி நெடுமாறனைப் பார்த்து, "இந்தக் குழப்பத்திலிருந்து தெளிவு பிறக்கப்பாடுபடுங்கள் மிஸ்டர் நெடுமாறன்! பட்டணத்திலேயே மிகப் பெரிய குடும்பம்; சேரி வாழ்வோருக்கு அயராது உதவி செய்துவந்த உன்னத மனிதர்களடங்கிய குடும்பம்; இன்றைக்குப்பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில், நாம், சிறு விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு, பெரிய குற்றங்களை நடத்தியவர்களை நாட்டிலே விட்டுவிடக் கூடாது" என்று கூறினார்.

நெடுமாறன் பாஸ்கர் பக்கம் திரும்பி, "உங்களுடைய நிலைமையைக் கண்டு மிகப் பரிதாபப்படுகிறேன், மிஸ்டர் பாஸ்கர்! ஆனால் இந்தப் பையனை தூக்குமேடைக்கு அனுப்புவதால், உலகத்துப் பிரச்னைகள் எதுவும் தீர்ந்து விடாது. அதை மாத்திரம் மறந்து விடாதீர்கள்" என்றார்.

பாஸ்கர் பேசாமல் ஆறுமுகத்தையே உறறுப் பார்த்துக்கொண்டிருந்தார்,

திகைத்து நின்ற அவனைப் பார்த்தவண்ணமே "அவனுக்கு எந்தத் தீங்கும் நாங்கள் செய்யவில்லையே; பார்க்கப் போனால் அவனுக்கு நம் பங்களாவிலேயே இடம் கொடுக்க முடிவு செய்திருந்தேன்" என்று கூறினாள், புஷ்பா.

அது சரிதானம்மா. உங்கள் உதவிக்கு அவன் கட்டுப்பட்டவன் தான். ஆனாலும் அவன் பிறந்த இடத்தை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அவன் தவறு செய்திருந்தால்கூட, அவன் கூடிவாழ்ந்த மக்களின் அடிமைத்தனத்தையும், அறிவுச் சூன்யத்தையும் கவனித்து அவர்களுடைய செயலை எடை போடவேண்டும்" என்றார் நெடுமாறன்.

இதைக் கேட்ட பாஸ்கர் உரத்த குரலில் பேச ஆரம்பித்தார். "மிஸ்டர் நெடுமாறன்! இந்த முட்டாள் செய்த அக்கிரமத்தை எண்ணி, என் தந்தை செய்துவந்த தான தருமங்கள் எதையும் நான் நிறுத்திவிடவில்லை. இன்றுகாலை கூட, உத்தமநாதபுரத்திலே பூங்கா ஒன்று கட்ட ஆயிரம் ரூபாய் அனுமதித்துவிட்டுத்தான் வந்தேன். இனி உத்தமநாதபுரம் பூங்காவில் பூப்பந்தாட்டம், சடுகுடு முதலியவைகள் இருக்கும்......"

"ஐயோ, போதுமே!" என்று பாஸ்கரைவிட உரத்தக் குரலில் அவர் பேசியதை தடுத்தார் நெடுமாறன்.

இதற்குள் முன்னால்வந்த நல்லமுத்து, "பூப்பந்தும், சடுகுடுவும் சேரிவாழ்வோரை சீர்திருத்திவிடுமா? என்ன மிஸ்டர் பாஸ்கர், தந்தையை இழந்தபின்னும், உங்களுக்கு உலகநிலை விளங்கவில்லையே! குடிசையில் வசிப்போரின் உள்ளம் சீர்படப் பூப்பந்தும் பளிச்சங்குடுவும் போதுமா? அவைகளைவிட இன்னும் ஆழமான, ஆராய்ந்தறிந்த காரியங்கள் தேவையல்லவா?" என்றான்.

பாஸ்கர், நல்லமுத்துவின் ஆவே சப் பேச்சுக்கும் பதில்கூறத் தயங்க வில்லை.

"சேரியிலிருப்போர் இருக்கும் பிற்போக்கு நிலைக்கு நாங்களென்ன செய்வது? உத்தமநாதர் குடும்பம் எந்த ஏழையையும் உண்டாக்க வில்லை என்பதும், அதே நேரத் தில் ஆயிரக்கணக்கான ஏழை களுக்கு அன்னப் பிச்சை அளித் திருக்கிறதென்பதும் ஞாபகமிருக் கட்டும், பணம் இருக்கிறதே என் ருல் பணத்தை எடுத்து ரோடிலா வாரியிறைப்பார்கள்?" என்ருர் பாஸ்கர்.

"அப்படி இல்லை, பாஸ்கர், சேரி வாழ்வோர், சகதியில் இன்னல் அநுபவிப்பது உமக்குத் தெரியு மென்ருல், அவர்கள் துயர் தீர்க்கத் தாங்கள் செல்லும் பாதை மிகத் தவருனது! உண்மையில் இந்த நாட்டிலே ஏழை எல்லா வகையி லும் ஏற்றமடைய வேண்டுமென் ருல்.........',

"பொதுவுடைமை" என்று இடையில் கத்தினுர் கிருஷ்ணசாமி. அவ ருடைய குரலில் கிளம்பிய கிண்ட லில் திகைத்துத் திரும்பினன் நல்லமுத்து. அதற்குள் கிருஷ்ண சாமியே பேச ஆரம்பித்தார்.

"நாமெல்லாம் பெரியவர்கள், சார்! இந்த இடத்திலே, தூக்கு மேடைக்கருகில் நிற்கும் ஆறு முகத்திற்காக நாம் ஒன்று கூடி நிற்கிறேம். இப்படிப்பட்ட நேரத் திலே குழந்தைகள் மாதிரி பேசு வது அழகல்ல! நாமெல்லோரும் பொறுப்பு வாய்ந்த பதவியிலிருப் பவர்கள். நாம் எல்லோரும் கூடி "பொதுவுடைமை, தனிஉடைமை" என்றெல்லாம்வேதாந்தம் பேசுவது சரியில்லை!" என்று கூறினுர் கிருஷ்ணசாமி.

நல்லமுத்து அவருடைய பேச் சில் தொனித்த கிண்டலைக்கண்டு சொல்லொணுக் கோபம் அடைந் தான்.

"சரிதான், சார்........" என்று அவன் ஆரம்பிப்பதற்கும், ஒரு போலிஸ்காரன் உள்ளே நுழை வதற்கும் சரியாக இருந்தது.

நல்லமுத்து பேச்சை நிறுத்திக் கொண்டு அவனை நோக்கினன். வந்த போலிஸ்காரனும் இன்ஸ் பெக்டர் ஆதிமூலத்திற்கு வணக் கம் தெரிவித்துவிட்டு "ஆறுமுகத் தின் தாயும், தங்கையும் வந்திருக் கின்றனர், சார்!' என்ருன்.

'தாயும் தங்கையும்' என்ற சொல் காதில் விழுந்த மறுகணமே மயிர்க் கூச்செறிய, "ஐயோ, வேண்டாம், வேண்டாம்!" என்று கத்தினன் ஆறுமுகம். அவனுடைய உடை லெல்லாம் நடுங்கியது. அவனு டைய வெட்கத்தையும் பயத்தை யும் கண்டு நெடுமாறனுக்கும் நல்ல முத்துவுக்கும் பரிதாப உணர்ச்சி மேலிட்டது.

ஆனல் கிருஷ்ணசாமிக்கோ, ஆதிமூலத்திற்கோ எந்த மாறு தலும் ஏற்பட்டதாகத் தோன்ற வில்லை.

"ஆறுமுகத்தின் தாயும், தங்கை யுமா? அவர்கள் இவனைப் பார்ப் பதற்கு உரிமை உடையவர்கள். உடனே உள்ளே அனுப்பு!" என்று கட்டளையிட்டார் கிருஷ்ணசாமி.

வந்த போலிஸ்காரன் தலை குனிந்து மறுபடியும் வெளியே போனுன்.

ஆறுமுகத்தின் உடல் பூராவும் வெடவெடத்தது. அவன் என் றுமே அநுபவித்திராத வெட்க மும், அவமான எண்ணமும் அவனு டைய மூளையைக் குழப்பியது. மிக உயர்ந்த மலைச் சிகரத்திலிருந்து மிக வேகமாக பாதாளத்தில் விழு வது போன்ற பயங்கர உணர்ச்சி தோன்றியது. கால் கைகள் அவ னையுமறியாமலே நடுங்கின. விழித்த விழி மாருமல் வாயிற்படியை நோக் கிக் கொண்டிருந்தான்.

வாயிற்கதவுகள் நன்ருகத் திறந் தன. அவன் தாய் அஞ்சலை அங்கு வந்து நின்ருள். உடனேஓடிப்போய் அவளை அந்த இடத்தைவிட்டு வெளியே தள்ளிக் கதவைத் தாழ்ப் பாள் போட வேண்டுமென்ற திடீர் உணர்ச்சி ஒன்று அவன் மனதில் தோன்றியது. நிமிர்ந்து அஞ்ச லையை உற்று நோக்கிய வண்ணமே இரண்டடி எடுத்து வைத்தான். அதற்குள் அஞ்சலையே "ஓ"வென்ற கூச்சலுடன் ஓடிவந்து ஆறுமுகத் தின் தோளைப் பிடித்து இறுக அணைத்துக் கொண்டு அழ ஆரம் பித்தாள். அதற்குள் அங்கு சுற்றி நின்றவர்களைக் கண்டவுடன்பெரும் அழுகை, பெருமூச்சாய், விம்மலுமாக மாறியது. "ஏண்டா, ஆறுமுகம்... ......! ஆறுமுகம்........! மகனே!" என்று சொல்வதைத்தவிர வேறு வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வரவில்லை.

அவளுடைய தோளில் சாய்ந்த வண்ணம, தன்னுடைய விம்மலை அடக்கிய ஆறுமுகம் தலையை மாத் திரம் நிமிர்த்தி வாயிற்படியை நோக்கினன். அங்கே செங்கமலம் நின்று கொண்டிருந்தாள்.

அவனுடைய நடுக்கம் இன்னும் தீரவில்லை. நாக்கு வரண்டு கிடந் தது. செங்கமலத்திற்கு அப்பால் அவன் நண்பன் முத்து நின்று கொண்டிருந்தான். பிளந்த வாயோடு, ஆறுமுகம் என்ன கூறப் போகிருன் என்று எதிர்பார்த்த வண்ணம் இருவரும்நின்று கொண் டிருந்தனர்.

மெதுவாக தலையைத் திருப்பி அந்த அறையில் நின்று கொண்டி ருந்த மற்றவர்களையெல்லாம் ஒரு முறைப் பார்த்தான் ஆறுமுகம். பாஸ்கர், புஷ்பா, ஆதிமூலம், கிருஷ் ணசாமி முதலியோர் ஒரு பக்கம், நல்லமுத்துவும் நெடுமாறனும் மற் ருேர் பக்கம், நடுவில் அவனும், அவன் குடும்பமும்!

ஐயோ! அவர்கள் முன்னிலையில் அவன்குடும்பம் இப்படிப்பட்ட அவ மானச் சூழ் நிலையில் நிறுத்திவைக் கப்பட்டிருக்கிறது. அவன் குடும்பத் தையே அந்த மாளிகை வாசிகள் ஏளனத்தோடு பார்த்தவண்ண மிருக்கின்றனர். இதைவிட அவர் கள் அவனுக்கு என்ன தண்டனைதர முடியும்? அவமானத்தின் ஆரம் பமே இங்கிருந்துதான் போலிருக்கி றது!

இப்படிப்பட்ட எண்ணங்களி டையே மரம்போல நின்ருன் ஆறு முகம். அவன் தோள்களின்மேல் கையை வைத்த வண்ணம் அஞ் சலை விம்மிக் கொண்டிருந்தாள்.

"ஆறுமுகம்! இப்படிப்பட்ட ஆபத்துகள் வருமென்று தெரிந்தி ருந்தால் உன்னை அங்கேபோகவே சொல்லியிருக்க மாட்டேன்டா!

எங்கே முடிகிறது?

"காம உணர்ச்சியை வற்புறுத்து வதற்குப் பதிலாக சினிமா உயர்ந்த இலட்சியங்களை எடுத்துக்காட்டி போதனையும் பிரசாரமும் செய்ய லாம் என்று நான் நினைக்கிறேன். நமது சினிமாப்பட உற்பத்தியாளர் கள் பொதுஜனங்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்றும், அதே சமயத்தில் தங்களுக்குரிய நியாய மான லாபத்தைப் பெறவேண்டு மென்றும் நான் விரும்புகிறேன்"

—பிரசாத் அக்-10

ஐயோ, எங்களையே இரண்டு நாளாக உயிரை வாங்கிவரும் இந்த போலிஸ் உன்னை என்னவெல்லாம் பண்ணிச்சோ......!" என்று கூறியவண்ணம் பெருமூச்சு விட்டாள்.

செங்கமலம் முன்னால்வந்து "நாங்க எங்கேபோனாலும் எங்கள் பின்னாடியே போலிசு வருது, அண்ணே!" என்று மெதுவாகக் கூறினாள்.

"நீ சொல்லு, ஆறுமுகம்! எந்தப் பயல் இதிலே இருக்கான்னு. ஒரு கை பார்த்திடுறேன். இனிமேல் யோசனையே வேண்டாம். நல்லதோ கெட்டதோ பின்னால் பார்த்துக்கொள்வோம்!" என்று சுற்றி நின்றவர்களை முறைத்துப்பார்த்த வண்ணம் கூறிக்கொண்டே வந்தான், முத்து.

அஞ்சலை திடுக்கிட்டுத் திரும்பினாள். "ஐயோ! அதெல்லாம் வேண்டாம். நடந்த கொலைபோதும். இப்போ தப்பிக்கிற வழியைப் பாருங்கடா. என்னால் இனித் தாங்கமுடியாது!" என்று தாரை தாரையாகக் கொட்டிக்கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்த வண்ணம் கூறினாள் அஞ்சலை.

அவர்கள் எல்லோரையும் சமாதானப்படுத்தி, தைரியமாக விட்டுக்கனுப்ப வேண்டுமென்று தோன்றியது ஆறுமுகத்திற்கு. ஆனால், அந்தப் பெரிய மனிதர்கள் முன்னிலையில் அதை எப்படிச் செய்வது என்று அவனுக்குப் புரியவில்லை. என்றுமில்லாத முறையில் தாய்பாசமும், தங்கை அன்பும் அவனுக்கு அதிகமாகியது.

அழுதுகொண்டிருந்த அஞ்சலையின் கையை இறுகப்பிடித்தவண்ணம், "அழாதே அம்மா! இதெல்லாம் ஒன்றும் பெரியவிஷயமில்லை. விரைவில் இதிலிருந்து தப்பித்துக் கொண்டுவந்துவிடுவேன்! கவலைப் படாதீர்கள்!" என்றான் ஆறுமுகம். இந்த வார்த்தைகளைக் கூற, அவனுக்கு எங்கிருந்து தைரியம் வந்தது என்று தெரியவில்லை. ஆனால் அவன் சொன்ன மறுவினாடியே அந்த அறையிலிருந்த எல்லோருமே அவனை ஒரே நேரத்தில் பார்த்தனர்.

ஆதிமூலமும் கிருஷ்ணசாமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

அந்த வார்த்தைகள், இன்னும் அதிகக் கண்ணீர்த்துளிகளை அஞ்சலையின் கண்களிலிருந்து கொட்டின.

"எங்களால் ஆனதை நாங்கள் செய்திரேமப்பா. உனக்கு என்ன செய்யணுமென்னு, சொல்லு!" என்று கூறினாள் அவள்.

"இனிமேல் நாங்க எதுக்கு இருக்கணும் அண்ணே! உனக்கு என்ன வேணுமென்று சொல்லு அண்ணே!" என்று கெஞ்சினாள் செங்கமலம்.

ஆறுமுகம் பேசாமல் அவர்களிருவரையும் பார்த்துக்கொண்டிருந்தான்.

சேச்சே! அவர்களைச் சமாதானப் படுத்த ஏதோ கூறினான்: அவர்களால் அவனைத் தப்புவிக்க என்ன செய்யமுடியும்? ஏழை என்ற பதத்திற்கே இலக்கணம் அவன் குடும்பம். அதிலே யார்தான் யாருக்கு என்ன செய்யமுடியும்?

"சட்டம் என்பது ஒரு இருட்டறை; அதில் செல்ல ஏழையால் பிரகாசமான விளக்கைப் பெற முடியாது!" அப்படிப்பட்ட நிலையில் அவனுக்கு யார்தான் உதவிசெய்ய முடியும்? அவன் தாயார் பாபம்! அவள் அன்றாடம் கூழுக்குப்படும் அவதி அவன் அறியாததா?

அவன் தங்கையா? ஐயோ பாபம்! ஏதோ எடுத்த ஜன்மத்தை வேகமாக கரை சேர்த்துக்கொண்டிருக்கிறாள். அவள் என்ன செய்ய முடியும்?

யார் முன்வந்தால்தான் என்ன செய்யமுடியும்? இதோ நல்லமுத்துவும், நெடுமாறனும் இருக்கின்றனர். அவர்கள் மாத்திரம், மந்திரமா செய்யமுடியும்?

ஆறுமுகத்திற்கு என்ன பதில் கூறுவது என்றே புரியவில்லை. இருந்தாலும், அந்த அறையில் நின்றவர்களுக்கு முன்னிலையில் தன்னுடைய கோழைத்தனத்தையும், அவமானத்தையும் வளர்த்துக் கொள்ள அவன் விரும்பவில்லை.

"நீங்க பேசாமல் வீட்டுக்குப் போங்க, அம்மா! எல்லாம் நானே பார்த்துக்கொள்கிறேன்!" என்று கூறியவண்ணமே முத்துவின் பக்கம் திரும்பி, "இந்தா முத்து, அம்மாவையும், செங்கமலத்தையும் பத்திரமா வீட்டுக்கு அழைத்துப் போ" என்றான்.

"நான் போகிறேன்டா! பின்னே இந்தக் கிழம் என்னதான் செய்வது? என்னால் முடிந்ததையெல்லாம் செய்துவிட்டேன். உன்னைப் பெற்று வளர்க்க நான் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. மூணு வயதிலிருந்தே நீ நோயாளி, உன்னைக் காப்பாற்றி ஆளாக்கப்பட்ட பாட்டை நினைச்சா, மயக்கந்தான் வருது. வேலைக்குப்போயிட்டே; இனி நமக்கு ஒரு குறையுமில்லேன்னுதானே நினைச்சேன். எல்லாம் இப்படியா முடியணும்" என்று கூறிக்கொண்டிருக்கும்பொழுதே அஞ்சலை 'ஓ'வென்று அழுதுவிட்டாள். அதற்குமேல் அவளால் அழுகையை நிறுத்தமுடியவில்லை.

ஆறுமுகத்திற்கு, ஆத்திரமும் அழுகையும் மாறி மாறி வந்தது. பாஸ்கரையும் புஷ்பாவையும் பார்த்தவுடன் அவமான உணர்ச்சி அதிகமாகியது. வேதனை வேலாகியது.

★ அவரும் இவரும் ★

புதிய ஆலயம்! அதுவும் காந்தியாருக்கு!!

கவர்னர் மாளிகையில் அதனைக் கட்டப்போவதாக வெளியிட்டு நிதி சேகரிக்கப்பட்டு வருகிறது.

இந்த முயற்சியின் முன்னோடும் பிள்ளையாக அன்பர் ஆச்சாரியார் அடிக்கடி பத்திரிகைகள் வாயிலாகக் காட்டிக்கொண்டு வருகிறார்.

அறிக்கைகள்! அணா, ரூபாய் வரவுகள்!! ஆச்சாரியார் செல்லுமிடந்தோறும் வழங்கப்பட்டதாகச் செய்திகள்!— இவ்வளவிருந்தும் பணம் வேகமாகச் சேர்ந்ததாகத் தெரியவில்லை.

காரணம், இதனையும்—தனக்கும் ஏனைய காங்கிரஸ்காரர்களுக்கும் இடையே உள்ள 'போட்டி'களில் ஒன்றாக ஆச்சாரியார் கருதுவதாகக் கூறுகின்றனர். அதனாலேயே டில்லியிலுள்ள காந்தி சேவா நிதிக் குழுவினரை நாடிப் பணம் பெற முயல்வதாகவும் கூறப்படுகிறது.

எப்படியோ, போகட்டும்!

ஆச்சாரியார் இந்த 'அதிதீவிர' முயற்சியிலிருக்கிறார்.

இதோ, காந்தியாரின் மற்றொரு சீடர் சொல்லுகிறார்:

"மக்களின் உள்ளத்தை உறைவிடமாகக்கொண்ட மகாத்மா காந்திக்கு வேறு நினைவுச் சின்னங்களே தேவையில்லை"

கூறியது, பிரசாத்! புது டில்லியில்! அக்டோபர் 11!!

"ஐயோ அம்மா! போதுமே. அழாமல் குடிசைக்குப் போயேன்"

அஞ்சலை விம்முவதை நிறுத்தவில்லை.

"என்னை மறந்துடு அம்மா......" என்று கூறும்போதே ஆறுமுகமும் அழுதுவிட்டான்.

"மறப்பதா......! நல்லாயிருக்கு; பெற்ற மனதிற்கு பிள்ளை கூறும் உபதேசம்! எங்கிருந்துடா உனக்கு இந்தக் கல்மனசு வந்தது?" என்று ஆத்திரமாகக் கேட்டாள், அஞ்சலை.

பரிதாபத்தோடு நிமிர்ந்து பார்த்தான், ஆறுமுகம். இதற்குள் ஆதிமூலம், "சரி, சரி! நாழியாகிவிட்டது. எல்லோரும் புறப்படுங்கள்" என்று கூறியவண்ணமே பாஸ்கர் பக்கம் திரும்பி, "மன்னிக்கவேண்டும் மிஸ்டர் பாஸ்கர். இந்தமாதிரி காட்சியை நீங்கள் கவனிக்க நேரிடுமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. போகலாமா......?" என்றார்.

'பாஸ்கர்' என்ற பெயரைக்கேட்டவுடன் அஞ்சலைத் துள்ளிக் குதித்து அவரருகில் ஓடி வந்தாள்.

"சாமி......! சின்ன எஜமான்...! என்னைத் தெரியுதா? நான் தான் சிறுவயதிலேயே உங்களைத் தூக்கி வளர்த்தவள்........ என் மகனைக் காப்பாற்றுங்கள், சாமி! அவன் ரொம்ப நல்லவன், சாமி!!.........!! என்று கூறிக்கொண்டேபாஸ்கரின் கால்களில் விழுந்தாள், அஞ்சலை.

இந்தக் காட்சி ஆறுமுகத்திற்கு இன்னும்ஆத்திரத்தைக்கிளறியது, "அம்மா......!" என்று கத்தினன். இதற்குள் ஆதிமூலம் "இந்தா, கிழவி! இதென்ன பைத்யக்காரத் தனம். அவர் காலைவிடு" என்று கூறிக்கொண்டே அஞ்சலையின் கையைப்பிடித்துத் தூக்கினர். எழுந்த அஞ்சலை புஷ்பாவைப்பார்த்தாள். "எஜமானியம்மா தானே......? ஏம்மா, என்மவன் ஒரு தவறும் செய்திருக்கமாட்டானம்மா! அவன் ஒரு பாவமும் அறியாதவனம்மா! எப்படியாவது தப்புவிக்க வையம்மா!! உங்கள் உப்பைத்தின்று வளர்ந்த குடும்பமம்மா இது. நிச்சயமா, நாங்கள் துரோகம் செய்யவேமாட்டோம்!" என்ருள்.

புஷ்பாவின் கண்களில் நீர் ததும்பியது. "நாங்கள் செய்வதற்கு இனி ஒன்றுமில்லை, அஞ்சலை" என்ருள், புஷ்பா.

"நாமென்ன செய்வதற்கு இருக்கிறது? சேரியிலேகிடந்தவனுக்கு பங்களாவில்காரோட்டும்வேலைகொடுத்தோம்! அதை ஒழுங்கா, காப்பாற்றிக் கொள்ளத் தெரியவில்லையென்ருல், நாங்கள் என்ன செய்வது? **நிலைமையை அறிந்து, அவனவன் வாழக் கற்றுக் கொள்ளனும்!"** என்று கூறிவிட்டுப் புறப்பட்டார், பாஸ்கர்.

கண்ணீர் ததும்பிய கண்களுடன் "அழாதே, அஞ்சலை!" என்றுகூறிக்கொண்டே பாஸ்கரைத் தொடர்ந்தாள் புஷ்பா.

அஞ்சலை, செங்கமலம், முத்து மூவரையும் தள்ளிக்கொண்டு பின் சென்ருர், ஆதிமூலம்.

நல்லமுத்துவும், நெடுமாறனும் அவர்கள் பின்னே சென்றனர்.

கிருஷ்ணசாமியும், ஆறுமுகமும் மாத்திரம் அங்கே தனித்து நின்றனர்!

(தொடரும்)

★ 'வீட்டுக்கு வீடு!' ★

"வீட்டுக்கு வீடு ரேடியோ, இருக்க வேண்டும்"

—என்று, வானெலி அமைச்சர், கேஸ்கர் வெளியிட்டாராம். 'இருக்கவேண்டும்'—என்ற ஆசையைச் சொன்னரே தவிர, 'இருக்கும்படி செய்யப்போகிறேன்' என்று தெரிவிக்கவில்லை, அவர்.

"மலிவான விலையில், கம்பெனிகள், செய்துதரவேண்டும்"

—என்று, கம்பெனிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிருரே ஒழிய, 'சர்க்கார் சார்பில், மலிவான விலையில் 'ரேடியோ'க்களைச் செய்து தரப்போகிறேன்' என்று தெரிவிக்கவில்லை, அவர்.

இப்படியெல்லாம், தெரிவிப்பது அல்லவே, நமது மந்திரிமார்கள் கடமை? ஆசைகளைச் சொல்லுவார்கள். தோட்டத்துக் கந்தனும், குடிசைக் காத்தாயியும் எப்படி எப்படிக் கனவுகாண்பார்களோ—அதே 'கனவுகளை, ஆர்வத்தோடு, எடுத்துச் சொல்லுவர்கள் — ஆனல், 'அமைச்சர்'என்கிறபட்டமும் இருக்கும். அதை விடமாட்டார்கள்.

கேஸ்கார், "வீட்டுக்கொரு ரேடியோ வேண்டும்", என்ருரா— அவரது தலைவர் பண்டிதர் சொல்கிருர், "ரேடியோக்கள், வெறும் சங்கீதத்தை மட்டும் வளர்ப்பதாக இல்லாமல், நாட்டுமொழியையும் கலாச்சாரத்தையும் வளர்க்கவேண்டும்", என்பதாக. பாபம்! ரேடியோ இலாகாஎப்படிப் பணியாற்றுகிறது என்பதைக் கவனிக்க, நேரமில்லை போலும், அவருக்கு.

இந்திய வானெலி — சங்கீதத்தையா, வளர்க்கிறது? அப்பப்ப! 'தலைவலி' மருந்துக் கம்பெனிகளின் வியாபாரத்தையல்லவா, வளர்த்து வருகிறது. அது மொழியையும் கலாசாரத்தையும் வளர்க்க ஆரம்பித்தால் என்ன ஆவது?

வீட்டுக்கு ஒரு ரேடியோ! என்ருரே கேஸ்கர், இதோ ஒருவர் தெரிவிக்கிருர், 'மாட்டுக்கொட்டிலுக்குக் கூட ஒரு ரேடியோ இருக்கிறதாம். இங்கல்ல—அமெரிக்காவில். ராஜன் என்பார் நேரில் கண்டதாக 'மெயில்' ஏட்டில் தீட்டுகிருர். எதற்கய்யா, இங்குகூட ரேடியோ? மாட்டைச் சுலபமாகக் கறக்கவா, அல்லது மாடு கறப்பவன் ஆனந்தமாகக் கேட்டபடி வேலை செய்யவா, என்று கேட்டாராம். அதற்கு, இரண்டுக்கும்தான்,' என்று பதில் தரப்பட்டதாம்.

அங்கே, மாட்டுக் கொட்டிலில், கூட ரேடியோ

மூவரும் நால்வரும் முப்பத்துமுக் கோடி தேவர்களும் "வாழும்" இங்கோ, ஆயிரத்தில் ஒரு வீட்டுக்குக்கூட ரேடியோ, இல்லை.

நன்றி

நான், வடாற்காடு மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தலில் காங்கிரஸை எதிர்த்து வெற்றிபெற்றமைக்குறித்து, என்னைப் பாராட்டிக் கடிதங்களும் தந்தியும் அனுப்பிய தோழர்களுக்கும் நண்பர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன் என வ. ஆ. மா. தி. மு. க. செயலாளர் அரக்கோணம் ஏ. எல். சி. கிருஷ்ண சாமி எழுதுகிருர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95 Tirukkachinambi St, Kancheepuram.